திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

மாலை : 8 4-3-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 30

எம். என். கிருஷ்ணன் அழைக்கிறார்

தோழர், எஸ், எஸ், ராஜேந்திரன் நாடகக் குழுவின் நகைச்சுவை நடிகர் தோழர் எம். என். கிருஷ்ணன் அவர்களுக்கும் நகைச்சுவை நடிகை தோழியர் டி. பி. முத்துலட்சுமி அம்மையாரின் மாமன் மகள் தோழியர் பார்வதி அவர்களுக்கும் சென்னை ராயப்பேட்டை லாயிட்ஸ் ரோட் 155-ம் இல்லத்தில் 10-3-55 காலை 9 மணிக்கு நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்த்துரை வழங்குவார். மாலை தேநீர் விருந்தும் இன்னிசையும் உண்டு.

குன்றக்குடிகளார் ஓட்டம்!

மலாயா தமிழர்களின் எழுச்சி! மடத்துத் தம்பிரானின் மருட்சி!!

சிங்கப்பூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் சரமாரியான கேள்விகள்.

21—2—55 அன்று மாலை 6-மணிக்கு சிங்கப்பூர் ஹேப்பி வேர்ல்ட் ஸ்டேடியத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குன்றக்குடி மடஅதிபதி 'இலக்கியம்' என்ற தலைப்பின் கீழ் பேசும்போது தமிழனின் சிறந்த இலக்கியமாகிய கம்பராமாயணத்தை எரிக்க வேண்டுமென்று தமிழகத்தில் ஒரு கூட்டம் பேசியும், எழுதியும் வருவது வருந்தத் தக்கதென்றும் அறிவு செத்தால்தான் அறம் வளரும்—அன்பு வளரும் என்று குறிப்பிட்டுவிட்டு; பெண்களுக்கு மறுமணம் செய்ய வேண்டுமென்று கூச்சலிடுவது தமிழர் சமுதாயத்தின் ஒழுக்கத்திற்கும் அறநெறிக்கும் புறம்பானது வெட்கக்கேடானது என்றும் கூறினார். அத்துடன் தமிழகத்தில் சீர்திருத்தம் என்ற பெயரில் நினைத்தபடியெல்லாம் பணத்தை மட்டும் குறிக்கோளாய் கொண்டு மக்கள் படிக்கக் கூடாத கீழ்த்தரமான எண்ணங்களைக் கொண்ட புத்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள் என்றும் தமிழர்கள் இதுபோன்ற தாழ்ந்த கருத்துக்களைக் கொண்ட புத்தகங்களை படித்தலாகாதென்றும் குறிப்பிட்டார்.

குன்றக்குடி மட அதிபதி தன்னுடைய மலேயா சுற்றுப் பிரயாணத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் தமிழகத்தில் வாழும் திராவிடர் இயக்கத் தலைவர்களையும் சீர்திருத்தக் கொள்கைகளையும் கண்டபடி தாக்கிப் பேசி வந்ததின் காரணமாய் **சிங்கப்பூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின்** சார்பில் குன்றக்குடியார் மலேயாவின் பலபகுதிகளிலும் பேசிய பேச்சுக்களில் உள்ள, ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களை கேள்விகளாக அச்சிட்டு குன்றக்குடியாருக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டன. அத்துடன் கழகத்தின் சார்பில் மேடையில் குன்றக்குடியாரிடம் வாதிடத் தயாராக உள்ளதாகவும் சவால் விடப்பட்டது. ஆனால் அந்தக் குன்றக்குடியார், கேள்விகள் கேட்க விரும்புவோர்கள் என்னை தேங்ரோடில் இருக்கும் சுப்பையா கோவிலில் இரவு 9-மணிக்கு மேல் வந்து சந்திக்க வேண்டும் என்றும், கேள்வித் தாள்களை அச்சடித்து எல்லோருக்கும் வழங்கியது மிகவும் தவறு எனக் குறிப்பிட்டுவிட்டு பேச்சை அவசர அவசரமாக முடித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

கேள்விகளுக்கு குன்றக்குடி மடஅதிபதி பதில்சொல்லாமல் அவசர கோலத்தில் ஓடியதைக் கண்ட பொதுமக்கள் 'குன்றக்குடியாரே! கேள்விகளுக்கு பதில் கூறுங்கள் என்று கேட்டனர். இதனால் கூட்டத்தில் சிறிது குழப்பம் ஏற்படவே தி. மு. க. தோழர்கள் அமைதியை நிலைநாட்டினார்கள். கேள்வித் தாள்களை படித்த பொதுமக்கள் சைவ மதத்தின் பாதுகாவலர்களாய் போற்றப்படுபவர்களின் கீழ்த்தரமான செயல்களைப் பற்றியும் ஆபாசமான புராணக் கதைகளையும் அந்த ஆபாசக் களஞ்சியங்களுக்கு ஆதரவு தேட வந்த குன்றக்குடியாரையும் வெறுத்துப் பேசிக் கொண்டு சென்றனர்.

சிங்கப்பூரில் பெரியார்



சிங்கப்பூர் திராவிடர் கழக சொற்பயிற்சி மன்ற மாணவர்களுடன் பெரியார் இடமிருந்து வலம்; ஆனைமலை நரசிம்மன், பெரியார், சேலம் ராஜாராம்

கேள்விகளின் விவரம்

அய்யா அடிகளே!

1. கோலாலம்பூரில், மாரியம்மன் கோவிலிலே நடைபெற்ற கூட்டத்திலே 'ஏ மனிதனே! விரிந்த வானுலகில் ஆண்டவன் ஒருவனே உயிருள்ள பொருள்களைப் படைக்க முடியும்! மக்களால் இயலாது' என்று பேசியுள்ளீர்கள். ஆனால்—

மலாயாவுக்குப் புறப்படுமுன் சென்னை மயிலைக் கோயிலில் சமயப் பேரவை சார்பில் கூடிய கூட்டத்தில் ஏழாம் நூற்றாண்டில் இதே மயிலையில் எலும்பிலிருந்து அழகிய பெண்ணை திருஞான சம்பந்தர் உருவாக்கியதாகக் குறிப்பிட்டுவிட்டு அது பொய்யா? கனவா? என்றகேள்விக்குறிகளை எழுப்பினீர்கள்,

உயிருள்ள பொருளை மக்களால் படைக்க முடியாதென்று கூறும் தாங்கள் மனிதனாகிய திருஞான சம்பந்தர் உயிரற்ற எலும்பிலிருந்து எப்படி அழகிய பெண்ணை உருவாக்கினார்? உங்களது இரண்டு கூட்டப் பேச்சுகளில் எது உண்மை?

2. அதே கூட்டத்தில் பட்டுக்கோட்டை சோஷியலிஸ்ட் தோழர் வேதாசலம் என்பவரிடம் உரையாடியபோது ஆலயத்திற்கு போகவேண்டிய அவசியமில்லை. வயிற்றுக்கு ஒருவன் வாடுவதை பார்த்துவிட்டு பேசாமல் போகாதீர்கள். அவன் பசிப் பிணியை போக்குங்கள். அதுவே ஆண்டவன் பணி என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழகத்தில் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியாய், பஞ்சத்திலும், வறுமையிலும் வாடும்போது, மதத்தின் பெயரால் திருப்பதி வெங்கடாசலத்திற்கு பல லட்சக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள வைரமுடி, இரத்தின ஹஸ்தம்—தில்லை நடராசனுக்கு தங்க ஓடு

11-ம் பக்கம்

"டெல்லி தர்பாரின் ஒரு கூத்து!"



இந்திய சர்க்காரின் அமைச்சர் குழுவிலிருந்து விலகிக் கொள்வதாக ராஜினாமாக் கடிதம் எழுதிவிட்டு சென்னை வந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் கோபத்தை நேரு பண்டிதர் சமாதானப்படுத்தி விட்டாராம் அதற்கேற்ப இப்போது டி. டி. கே. டெல்லியில்......;

டாக்டர். அழகப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி

ஆரம்பக் கல்வி விசாரணைக் கமிட்டித் தலைவரே, நலம் வேண்டுகிறேன். தாங்கள் 27-2-55-ம் நாளன்று மதுரைக் கல்லூரி யூனியன் ஆண்டு விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் விவரங்களை அறிந்தேன். "கல்லூரிகளில் தமிழ், போதனு மொழியாக்கப்பட வேண்டுமென்றும், இதனை விரைவில் செயல் முறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும்" சென்னை கல்வி அமைச்சர் சி. சுப்ரமண்யம் அவர்கள் அண்மையில் கூறியிருப்பதை தாங்கள் கண்டித்திருக்கிறீர்கள்.

சர்க்கார் இப்பிரச்னையில் ஆழ்ந்த சிந்தனையுடனும் தக்க யோசனையுடனும் நடக்காவிடில் கல்லூரி கல்வித் துறைக்கே பெரும் கேடு விளையுமென்றும், இதில் அவசரத் தன்மை கூடாதென்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இன்று நாள் தவருது கல்விச் சீர்திருத்தம் குறித்துப் பேசுவதே ஒரு 'பாஷன்' ஆகச் சிலர் கொண்டு விட்டனர். தற்போதுள்ள கல்விமுறை சரியோ தவரோ என்பது ஒருபுறமிருக்க—கல்வித்துறை குறித்து மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது போல சிலர் பேசிவரும் பேச்சுக்கள் இருக்கிறதே—அவை இன்றைய கல்வி முறையை குழப்பி வருகிறது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தக் குழப்ப நிலையில் தாங்கள் ஆரம்ப கல்விச் சீர்திருத்த கமிட்டிக்குத் தலைவராயிருந்து அனைவரின் அபிப்ராயத்தையும் அறிந்து வருகிறீர்கள். அந்த அபிப்ராயங்களைத் திரட்டித் தங்களின் கமிட்டி எந்தவிதமான உருவமைக்குமோ அறியேன்!

எனினும், தாங்கள் கல்வி அமைச்சர் சுப்ரமண்யம் போன்றவர்களுக்கு உபதேசம் செய்வதோடு நில்லாமல். ஆரம்பக் கட்டத்திலிருந்தே—பயன் தரக்கூடிய கல்வி முறையையும் குறிப்பாக 3-ம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டிய நிலையில் தங்களின் கமிட்டி திட்டம் வகுத்தால் நலமாயிருக்கும், ஆரம்பக் கல்வியிலிருந்து கல்லூரி வரை கல்வியின் தரம் தொடர் சங்கிலி போல இருத்தல் வேண்டும். அதற்கு ஆவன செய்வீர்களென்றே நம்புகிறேன். அதை விடுத்து கல்வி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களைக் கண்டித்து விட்டு தாங்கள் தங்களின் கமிட்டியின் சிபார்சில் ஆச்சாரியார் செய்தது போல பத்தாம் பசலி முறைகளுக்கு கைலாகு கொடுக்கும் திருப்பணியில் இறங்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள, கூத்தரசன்

தோழர் ஸி. டி. தேஷ்முக் அவர்கள் புதுடெல்லி

நேரு சர்க்காரின் நிதி அமைச்சரே வணக்கம். தாங்கள் நேற்று பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட வரவு — செலவு விவரங்களைப் படித்தேன். அடா அடா, நேரு சர்க்காரின் நிதியமைச்சராகிய தங்களின் திறமை மிக அபாரம்! மூன்ருவது வகுப்புப் பிரயாணிகளுக்கு கட்டணத்தை அதிகப்படுத்தியுள்ள ரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியையும் தாங்கள் மிஞ்சி விட்டீர்கள்!

நேரு சர்க்காருக்கு இவ்வாண்டு வரவு 468 கோடியே 76 லட்ச ரூபாய், செலவோ 498 கோடியே 93 லட்சம்! இதில் ராணுவ செலவுக்கு மட்டும் 203 கோடி ரூபாயை ஒதுக்கி யிருக்கிறீர்கள்! வருவாயில் ஏறத்தாழ சரிபகுதி பட்டாளத்துக்கு!

உலக சமாதானத்தைப்பற்றி ஓயாமல் பேசிவரும் நேரு சர்க்காருக்கு 203 கோடி ரூபாய் ராணுவத்திற்கா? சமாதானப் பிரியராக யில்லாவிடில் வருவாயில் முக்கால் பகுதியும் பட்டாளத்திற்கே செலவிடுவர் போலிருக்கிறது!

பிரிட்டிஷ் ஆட்சியிலே ராணுவத்துக்கு 100 கோடி ரூபாய் செலவழித்து வந்ததையே காந்தியடிகள் வன்மையாகக் கண்டித்தார்! ஆனல் அகிம்சா மூர்த்திகளாகிய தங்கள் சர்க்காரின் லட்சணமோ...!

தோழர் தேஷ்முக் அவர்களே வரவுக்கு மேலாக 30 கோடி 17 லட்ச செலவு துண்டு விழுவதாக வரவு-செலவில் குறிப்பிட்டு, அதற்காக புதிய வரிகளைப் போட முனைந்துள்ள தாங்கள் அந்த 30 கோடியை இராணுவச் செலவில்தான் குறைத்திருக்கக் கூடாதா யென்று கேட்கிறேன்.

அப்படிக் குறைத்து விட்டால், "அமெரிக்காவில் நேரு சர்க்கார் பிடித்த ஒரு தீவு, பிரிட்டனிலும் சீனத்திலும் கைப்பற்றிய சில கிராமங்கள், பாக்கிஸ்தானில் படையெடுத்து வசமாக்கிக் கொண்ட பகுதிகள் அனைத்தும் நேரு சர்க்கார் பிடிப்பிலிருந்து அகற்றப்பட்டு விடுமோ?"

அதற்காகத்தான் இவ்வளவு பெருந்தொகை பட்டாளத்திற்கு செலவழிக்கத் திட்டம் தீட்டியிருக்கிறீர்களோ?

*மொத்த வருவாயில் சரிபகுதியை இராணுவத்துக்குச் செலவிடும் விசித்திர முகாமிலேயிருந்து கொண்டு, அணுகுண்டுகளை அழித்து விடுங்கள் என ஆச்சாரியார் அமெரிக்காவுக்கும் மற்ற நாடுகளுக்கு உபதேசம் வேறு செய்கிருர்!

விசித்திரப் பிறவிகள்!

அன்புள்ள, கூத்தரசன்

சிங்கப்பூரில் பெரியார்

திராவிட நாட்டின் தனிப்பெருந் தலைவர் பெரியார் அவர்கள் மலயா சுற்றுப்பிரயாணத்தில் 5-1-55-ல் சிங்கை திராவிடர் கழக இல்லத்திற்கு வருகை தந்தபொழுது திராவிடர் கழக சொற்பயிற்சி மன்ற மாணவர்களால் வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது.

பெரியார் அவர்கள் மாலை மணி 5-க்கு வருகை தந்தார்கள். அப்பொழுது கருஞ்சட்டையுடன் காட்சியளித்த மாணவர்கள் வரிசைப்பிடித்து நின்று வரவேற்ருர்கள். அதன்பிறகு திரு கோ. இரா. வெற்றிவேல் (கழகச் செயலாளர்) அவர்கள் பெரியாரவர்களை வாழ்த்தி கூட்டத்திற்கு தலைமைதாங்கி நடத்தித் தரும்படி கழகத் தலைவர் சே. நடராஜன் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தலைவர் தம் முன்னுரையில் நமது பெரியார் அவர்கள் தள்ளாத வயதிலும் சளையாது தொண்டு புரிந்து வருவது பற்றியும் அத்தொண்டினல் திராவிட சமுதாயம் அடைந்துள்ள நன்மைகளையும் விளக்கிப் பேசினர். பிறகு பயிற்சி மன்ற செயலாளர் தோழர் ஆ. து. ராமலிங்கம் அவர்களால் வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது.

அதன் பிறகு மாணவர்களுக்கு அறிவுரை பகரும் வண்ணம் சொற்பெருக்காற்றிய பெரியார் அவர்கள் — மலை நாட்டில் நமது இயக்கம் நிரந்தரமாக பரவி வருவதைக் காண மகிழ்ச்சியடைகிறேன் இந்நாட்டில் நமது கொள்கையை பரப்புவதற்கு ஓர் செய்தித்தாள் இல்லையென்றலும் யாரும் வியக்குமளவிற்கு வளர்ந்துவிட்டது நமது இயக்கம். இந்த அளவிற்கு வளர்ச்சியுற தொண்டாற்றிய பகுத்தறிவுத் தொண்டர்களைப் பாராட்டுகிறேன். தமிழ் நாட்டிலுள்ள மாணவர்களைப் பார்க்கிலும் பன்மடங்கு ஆர்வங் கொண்டவர்கள் இங்குள்ள மாணவர்கள் என்று கருதுகிறேன். குறிப்பாக எனக்கு இவ்வரவேற்பளிக்கும் மாணவர்களை கவனிக்கும்பொழுது என் உள்ளம் உவகையடைகிறது. ஆர்வமும், அறிவும், கட்டுப்பாடும் ஒருங்கே அமைந்த இம்மாதிரி மாணவர்கள்தான் நமக்கு அதிகம் தேவை. அன்பிற்குரிய மாணவர்களே நீங்கள் ஒவ்வொருவரும் கண்ணியம் கட்டுப்பாடுடன் இருந்து பகுத்தறிவைப் பரப்பி மககளை தட்டி எழுப்புங்கள் என்று கட்டளையிட்டு தன் உரையை முடித்துக்கொண்டார்.

கூட்டத்திற்கு முன்னறிவிப்பு இல்லாமலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமி யிருந்து பெரியார் அவர்களின் ஒவ்வொரு வார்த்தைக்கும் மதிப்பளிக்கும் வண்ணம் தங்கள் மகிழ்ச்சி மூலம் தெரிவித்தார்கள்.

துர்க்கா-வாசுதேவன்

தோழர் போளூர் சுப்ரமண்யம் அவர்களின் மகள் துர்க்காவிற்கும் சென்னை வாசுதேவன் அவர்கட்கும் அறிஞர் அண்ணு அவர்களின் தலைமையில் சென்னை சினிமா சென்ட்ரலில் 18—2—55-ம் நாள் திருமணம் சிறப்புற நடந்தேறியது. அதுபோது மணமக்களை வாழ்த்தி பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், எஸ். எஸ். தென்னரசு, ப. உ. சண்முகம், எ. கோவிந்தசாமி எம். எல். ஏ., டி. சண்முகம் எம். எல். ஏ., கே. எ. மதியழகன், காஞ்சி தங்கவேலர், அ. பொன்னம்பலனர் வாழ்த்துரை வழங்கினர்கள். மணமக்களை வாழ்த்தி தந்திகளும், கடிதங்களும் பரிசுகளும் ஏராளமாக வழங்கப்பட்டன. அண்ணு அவர்கள் வாழ்த்துரை வழங்கியபின் மணமக்கள் நன்றி தெரிவித்துக் கொள்ள மணவிழா இனிது முடிந்தது. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப் பெற்ருேம். நன்றி—நிர்வாகி.

நன்றி அறிவிப்பு

அறிஞர் அண்ணு அவர்களின் தலைமையில 18—2—55-ல் திருமணம் செய்து கொண்ட எங்களுக்கு வாழத்துச் செய்திகள், பரிசுகள் அனுப்பியவர்களுக்கும் நேரில் விழாவில் கலந்து வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

போளூர் துர்க்கா
சென்னை வாசுதேவன்

திருத்தம்

திராவிடன் 18-2-55 இதழில் 'திருவானந்தம்—சுந்தராம்பாள்' என்ற திருமணச் செய்தியில் தோழர் பாலகுருசிவம் அவர்களின் திருநிறைச் செல்வி சுந்தராம்பாள் என்று திருத்தி வாசிக்க வேண்டுகிருேம். —[ஆ-ர்]

விரைவில் !

திராவிடன் பதிப்பகத்தார் தரும் புதுக் காணிக்கை

புஷ்யமித்திரன்

மா. தங்கவேலர்

இலட்சோப லட்சம் வாசகர்களின் இருதயத்திலே நடமாடிய இலட்சியக் குரலோசை. சுயமரியாதைக்கும் சூழ்ச்சித் திறமைக்கும் நல்லெண்ணத்துக்கும் நயவஞ்சகத்துக்கும் ; வாழ்ந்தவர்களுக்கும் வந்தவர்களுக்கும் நடந்த போராட்டக் காதையின் புரட்சி ஓவியம்.

கவர்ச்சி தரும் பதிப்பு — கலைசொட்டும் முகப்பு

திராவிடன் பதிப்பகம்
P, B. No. 18. : வேலூர் (N.A.)

பம்பாய் திருவள்ளுவர் கலா மன்றத்தார் அளிக்கும் எழில் நிறை கலைப் படையல்

பலிபீடம் நோக்கி

கதை, வசனம் : நெல்லை. இரா. இளம்வழுதி
பயிற்சியாளர் : எஸ். எம். தேவராசன்

9-3-55 புதன் மாலை 7-30 மணி
பம்பாய் தாராவி வ. உ. சி. திடல்

கட்டணம் : ரூ. 1-5-0, 0-10-6

விளம்பர உறுப்பினர்கள் :
உ. அ. செல்லையா, இரா. வளர்மதி

சிறுகதை

எல்லாம் அவன் செயல்!

டி. புருடோத்தமன்.

●

சில மாதங்களுக்கு முன்... இரவு இரண்டு மணி யிருக்கும். கொட்டும் மழையிலே நனைந்தவாறு நடந்து கொண்டிருந்தேன். சிலர் என்னைப் பார்த்து பைத்தியம் என்று நினைத்திருந்தால்கூட தவறு சொல்வதற்கில்லை. சினிமா கலைந்து வந்தவர்கள், மழைக்காக தங்கசாலை பஸ் ஸ்டாண்டில் திரண்டிருந்தார்கள். மழையைப் பொருட்படுத்தாமல் நடந்து செல்லும் என்னைப் பார்த்து அவர்கள் வியப்படைந்ததில் ஆச்சரியமில்லையே!

என்னுடைய நண்பன் ஒருவனுடைய வீட்டிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தேன். மழையுடன் ஆரம்பித்த எங்களுடைய அரசியல் பேச்சு மழை சற்று ஓய்ந்ததும் மனமில்லா மனத்துடன் முடிக்க வேண்டியதாயிற்று.

சரி...சரி சீக்கிரம் கிளம்பு உன் இல்லக் கிழத்தியை நாம் பாராட்டுகிறோம்.

ஏன்?

இவ்வளவு நேரம் கழித்து வருவதற்கு அவர்கள் 144 போடாமல் இருக்கிறார்களே அதற்காக!

அவள் என்னுடைய மனைவி!

நான் அவனைக் கிண்டல் செய்வது போல் கூறிவிட்டு, விடை பெற்று நடக்க ஆரம்பித்து விட்டேன், ஆனால் பாதிதூரம் வந்திருக்க மாட்டேன்; அதற்குள்ளாகவே மழை ஆரம்பித்து விட்டது. சினிமா கலைந்த நேரமாதலால் ஒவ்வொரு கடைக்கு முன்னாலும் மக்கள் நிரம்பி யிருந்தனர். தங்குவதற்கு இடம் தேடுவதற்குள் முழுக்க முழுக்க நனைந்துவிட்டேன். இனிமேல் எதற்காகத் தங்குவது? என்ற எண்ணம்தான் மழையில் நனைந்தவாறு என்னை நடக்கச் செய்தது.

மூலகொத்தளம் மயானத்திற்குத் திரும்பும் சாலையிலே வந்து கொண்டிருந்தேன். என்னுடைய இல்லத்திற்கு அவ்வழியாகத்தான் செல்லவேண்டும். பகலிலேயே மக்களின் நடமாட்டம் அதிகமாக இல்லாத அச்சாலையில் அந்த நேரத்தில் எல்லாத் தெருக்களிலும் சாதாரணமாகத் தென்படும் எலி, பெருச்சாளி போன்றவைகள்கூடத் தென்படவில்லை. என்னுடைய மனைவி சொன்ன வார்த்தைகள் எனக்கு அப்பொழுது நினைவிற்கு வந்தது.

*

ஏன் இவ்வளவு நேரம் பொறுத்து வருகிறீர்கள்?

என்ன! புதுக்கேள்வி!? வேறு காதலியிருப்பதாகச் சந்தேகமோ?

என்னுடைய மனைவியின் பேச்சு நீண்டுவிடக் கூடாது என்பதற்காக இப்படி ஏதாவது வம்பு இழுத்து விடுவது என்னுடைய வழக்கம்.

அதற்கில்லை, உங்களுக்கு எப்பொழுது பார்த்தாலும் கிண்டல் தான், பேய் பிசாசு கிடையாது, கடவுளில்லை என்றெல்லாம் சாதாரணமாகச் சொல்லி விடுவீர்கள். உங்களுக்கு பயமென்பது என்ன வென்றே தெரியாது. ஆனால் நாங்களல்லவா கஷ்டப் படுகிறோம்....

அம்மா; தாயே! சற்று மெதுவாகப் பேசும். என்னடா...இவன் பெரிய பகுத்தறிவு பேசுகிறான். அவன் மனைவியைத் திருத்தவே அவனால் முடியவில்லை, என்று சில நிரந்தர வாந்திகள் தங்கள் வசைமாரியை ஆரம்பித்து விடுவார்கள்.

சரி...நான் சொல்வதைச் சற்று கேளுங்களேன். இந்தத் தெருவு ரொம்ப பொல்லாதது என்கிறார்கள். பிணம் செல்லும் பாதை... அதனால்...!

சரி, சரி, போதும்!

அவள் நிறுத்தி விட்டாள். அந்தப்பேச்சு ஏன் இப்பொது என் நினைவிற்கு வருகிறது? மனிதனின் மனோத்துவ ஆராய்ச்சியில் ஓர் பகுதி என் நினைவிற்கு வந்தது,

*

வானத்திலே பாதி நிலவு முகில்களுக்கிடையே கடங்காரனைப் போல அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் உதைபட்டு விம்மியழும் சின்னஞ்சிறு குழந்தைகளைப் போல காட்சியளித்தன. தெரு விளக்குகளெல்லாம் இருளப்பனுக்குச் சாட்சி கூறின.

உடலில் ஒட்டிய சட்டைத் தலைப்பை உதறிவிட்டு, தலையில் வடிந்த தண்ணீரைக் கைகளால் ஒரு முறை வடித்தெறிந்தேன். மேலும் செல்வதற்கு முயன்றேன் அப்போழுது—

ஓர் உருவம், எனக்கருகாமையிலிருந்த மரத்தடியில் அசைவதாக தெரிந்தது. மிக மெல்லிய ஓசையும் கேட்டது. பகுத்தறிவைத் துணைக்கழைத்துக்கொண்டு தெம்புடன் உற்றுக் கவனித்தேன். அங்கு ஏதோ ஓர் உருவம் உண்டு என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. அருகில் சென்று பார்த்தேன். சிறிது நேரம் பார்த்துக்கொண்டே யிருந்தேன். என்னுடைய கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் எனக்குத் தெரியாமலேயே விடை பெற்றுச் சென்றன.

ஓர் கிழவியின் உடல், கொட்டும் மழையிலே சேற்றிலேகிடந்து தத்தளித்தது. பக்கத்திலே அந்தக்கிழவியின் ஊன்று கோல் ஆதரவற்றுக் கிடந்தது. கிழவி மெதுவாக மூச்சிழுத்துக் கொண்டிருந்தாள், ஏதோ பேசுவதற்கு நாவசைத்தாள். குளிரின் இரும்புக்கரங்கள் அவளைப் பேசவிடாமல் தடுத்தது, பெண்மையின் நாணத்தைக் கூட மறைக்க இயலாத கந்தலாடை அவள் உடலை 'மனிதப் பிறவி' என்று எடுத்துக் கூறியது.

அப்பொழுது இரண்டு மனிதர்கள் அவ்வழியே சென்றார்கள், நான் அவர்களைக் கூப்பிட்டேன். சார் இங்கு வந்து விட்டுப் போகிறீர்களா?

அவர்கள் வந்தனர். நான் விஷயத்தைக் கூறினேன்.

அய்யோ பாவம்! என்ன செய்யலாம்?

இதோ இந்தத் திண்ணையிலே எடுத்துப் படுக்க வைத்துவிடலாம். நம்மால் இப்பொழுது வேறென்ன செய்ய முடியும்?

அவர்கள் என் கருத்தை ஏற்றுக் கொண்டனர். நாங்கள் அந்தக் கிழவியைத் தூக்கி மெதுவாக பக்கத்திலிருந்த வீட்டுத் திண்ணையில் படுக்க வைத்தோம்.

சரி வாடா போகலாம். நேரமாகிறது! எதையோ நினைத்து பயப்படுகிறவர்களைப்போல அவர்கள் சீக்கிரமாகச் சென்றுவிட்டனர். நான் அங்கேயே நின்று, யோசனை செய்துக்கொண்டிருந்தேன். இந்த வீட்டுக்காரருடைய ஒப்புதலில்லாமல் நாம் இந்தக் கிழவியை இங்கே படுக்க வைத்தது தவறு என்று என் மனச்சாட்சி கூறிற்று.

சார்...சார் என்று மெதுவாகக் கதவில் தட்டிக் கூப்பிட்டேன். ஓர் கனவான் கண்களைக் கசக்கிக் கொண்டு கதவைத் திறந்து வெளி வந்தார். நன்றாகக் குளிரும் அந்த நேரத்தில்...இன்பத்தின் உச்சியிலிருந்து அவரைத் தட்டி எழுப்பி விட்டேனோ என்னவோ? சற்று கோபத்துடன் கண்களைக் கசக்கி விட்டு யாரது? என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தார். நான் நிலைமைகளை அவருக்கு விளக்கினேன்.

என்ன அக்கிரமம் சார் இது? கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்குஉடைப்பது!

இலக்கியச் சுவை ததும்பக் கூறினார் அந்தப் பெரிய மனிதர். அக்கிரமம்! எது அக்கிரமம்? மனிதப் பிறவியிடத்தில் மதிப்பு வைத்ததா: அல்லது அவரை எழுப்பி உண்மை நிலைமையை அவருக்கு விளக்கியதா? எது அக்கிரமம்? ஒரு மேடைப் பேச்சே நடத்தியிருப்பேன். ஆனால்,

அது அவருடைய இல்லம் என்ற நினைவு! தடையுத்திரவு போட மேலும் என்ன கூறுகிறார் என்பதைக் கேட்க ஆவலுடன் காத்திருந்தேன்.

சார்...தூக்கிக்கிட்டு போங்கள் சார் இங்கிருந்து. இது என்ன சத்திரமா சாவடியா? அது இங்கு படுத்து செத்துத் தொலைச்சுதுன்னா நாளைக்கு சுடுகாட்டுச் சிலவு நம்ப தலையிலல்லவா வந்து விழும்.

அவர் அறைந்து விடுவாரா என்ற அச்சம் கூட ஏற்பட்டது எனக்கு(!)

இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்? நான் மிக மிக வணக்கத்துடன் மெதுவாக கேட்டேன்.

தூக்கிக் கொண்டு போங்கள் என்கிறேன்.

நான் சற்று நேரம் யோசித்துவிட்டு ரிக்ஷா கூப்பிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றேன். மழை அப்பொழுதும் விட்டபாடில்லை. தன்னுடைய முழு கௌரவத்தையும் காட்டிக் கொண்டிருந்தது.

அப்படியே கம்பி நீட்டிவிடாதீர்—அவர் கூப்பிட்டுச் சொன்னார். தமிழ் நாட்டு மன நிலை எவ்வளவு மோசமாகப் போய்விட்டது என்று சிந்தித்த பொழுது எனக்கு லேசாகச் சிரிப்பு வந்தது

ஓர் ரிக்ஷாவை அழைத்துக் கொண்டு வந்தேன். தம்பீ உனக்கு நாலணா தருகிறேன். இதோ இந்தப் பஸ் ஸ்டான்டிலேயே தங்குமிடம் இருக்குது பாரு...அங்கு படுக்கவைத்துவிடு. நான் கூறினேன்.

சார் நீங்களும் கூட வந்தா நான் தூக்கிக்கிட்டு போறேன். இல்லாட்டி முடியாதுங்க! போலிசுக்காரரு சும்மா விடமாட்டாங்க.

சரி!

நானும் கூடச்சென்றேன். பஸ் ஸ்டான்டில் கூட்டம் கலைந்திருந்தது. மணி மூன்றடிக்கப்போகிறது. கிழவியை மெதுவாக மழை எட்டாத ஓர் இடத்தில் படுக்க வைத்தேன். அதற்குள் இரண்டு தாணக்காரர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். நான் அவர்களைப் பற்றி அக்கறை எடுத்து கொள்ளவில்லை.

என்ன கிழவி? என்று தலை சாய்த்தவாறு கேட்டேன்.

கோ...டி...புண்ணியமுங்...க! கிழவி சொல்லி முடித்தாள். என் கண்கள் நிறைந்து விட்டன. தீபாலங்காரங்களுடன் பூசை நடைபெறும் பெரிய கோவில்கள் தான் என் நினைவிற்கு வந்தன. சூழ்நிலை என் சிந்தனையைக்கிளறி விட்டது என் மேல் குட்டையை எடுத்து கிழவிக்கு போர்வையாக அளித்து விட்டுத் திரும்பினேன்.

போலீஸ்காரன் ரிக்ஷாக்காரனை விசாரித்தான்,

உனக்கென்னடா தந்தாரு?

நாலணுங்க சாறு!

ரொம்பதாராளமான மனசு...! இன்னொருவன் கிண்டலாகக் கூறிவிட்டு என்னிடம் வந்தான்.

ஏனய்யா......அந்தக் கிழவி கிட்டேருந்து எவ்வளவு காசு எடுத்துக்கிட்டே? அவன் கேட்டான். எனக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. நானும் கூட வந்தால்தான் கிழவியைத் தூக்கிச் செல்வேன் என்று ரிக்ஷாக்காரன் சொன்னதற்குப் பொருள்இப்பொழுதுதான்விளங்கியது. ரிக்ஷாக்காரனுக்கு பலமான இரண்டு குத்து விழுந்தது. எனக்கொன்றும் புரியவில்லை.

பிறகு நடந்தவைகள் கூறுவதற்கு எனக்கே வெட்கமாக இருக்கிறது. என்னிடமிருந்த ஒரு ரூபாய் சில்லறையை அவர்கள் பெற்றுக்கொண்டு சென்று விட்டார்கள். என்னுடைய தன்மான உணர்ச்சி அவர்களுக்கு அதைத் தந்துவிட என்னைத் தூண்டிற்று. பரிதாபத்திற்குரியவனாக நின்றுக் கொண்டிருந்த என்னைப் பார்த்து அந்த ரிக்ஷாக்காரன் கூறினான்.

எல்லாம் அவன் செயல் சாமீ... நாம்ப வேணுமுன்னா செய்தோம் எல்லாத்துக்கும் ஒருத்தன் இருக்கான்!

நான் தலையசைத்தேன்!

இதுபோன்ற செயல்களை மட்டும் செய்து கொண்டிருக்கும் அவன் செயலை நான் மட்டும் ஏன் மறுக்க வேண்டும்?

●

திராவிடன் வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

தோழர்களே வணக்கம். ஏப்ரல் மாதத் துவக்கத்திலிருந்து திராவிடன் மேலும் புதிய அம்சங்களுடன் வெளிவரும். விலை முதலிய விவரங்கள் அனைத்தும் அடுத்த அறிக்கையில் காண வேண்டுகிறோம்.

—நிர்வாகி-திராவிடன்

திராவிடன்

சென்னை : 4—3—55 : வெள்ளி

நம்ம சர்க்கார்!

1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாள் வரை ஆட்சி செய்து வந்தது அந்நிய சர்க்கார்! அதற்குப் பிறகு நாட்டை ஆளுவது நம்ம சர்க்கார் என்று தேசியத் தோழர்கள் பெருமையுடன் பேசினர் அன்று! அவர்கள் அவ்வாறு பேசியதிலும் தவறில்லை. வெள்ளையர் ஆட்சியிலிருந்த கொடுமைகள்—வரிமேல் வரித் தொல்லைகள் ஆகிய அனைத்தும் படிப் படியாய்க் குறையும் என்று உண்மையிலேயே நம்பித்தான் மேற்கண்டவாறு பெருமிதம் கொண்டனர்; பேசவும் செய்தனர்.

இத்தகைய மாற்றத்துக்குத்தானே அன்று தேசியப் போராட்டத்தில் காங்கிரஸ் தோழர்கள் உள்பட பொது மக்களும் கலந்து கொண்டனர்; எனவே அந்த உரிமையில் அல்லது தேசத் தலைவர்கள் என்று சிறப்பிக்கப்பட்டவர்களால் அளிக்கப்பட்ட உறுதி மொழியின்பால் கொண்ட நம்பிக்கையிலே, வெள்ளையர் ஆட்சிக்குப் பிறகு பதவி பீடத்தில் அமரப்போகும் நம்ம சர்க்கார் நல்லாட்சி புரிவர் என்று எண்ணியிருந்ததில்—பேசிவந்ததில் யாரும் குற்றம் காண முடியாதுதான்.

எனவே இவ்வித நம்பிக்கையில் மண்ணை அள்ளிப் போட்டுவரும் "மகா மேதைகள்" இருக்கின்றனரே அவர்களின் போக்கினைத் தான் நாம் கண்டிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அவ்விதக் கண்டனங்களிலே அன்று நாட்டின் விடுதலைக் குழைத்த உண்மைத் தொண்டர்கள் கவனஞ் செலுத்துகிறார்களா யென்றால் அதற்குப் பதிலாக இன்னும் குருட்டு தேசபக்தியிலேயே மூழ்கியிருப்போம் என்று கூறும்போதுதான் நாம் மனவேதனை யடைகிறோம்.

நம் நாட்டைப் பொறுத்தவரை தேசியத் தோழர்களுக்கு அரசியல்விவகாரங்களை நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்க்கும் மனவளம் இருந்திருக்குமானால், அந்நியர் ஆட்சியிலிருந்த தொல்லைகளை ஓரளவுக்காகிலும் குறைத்திருக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இவ்விவரங்களை எடுத்துக் காட்டும்போது நாட்டுத் துரோகிகள், குறுகிய மனப்பான்மை படைத்தவர்கள் என்று தேசியத் தோழர்கள் தூற்றுகின்றனர்.

இப்படித் தூற்றப்படுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் கவலைப்படவில்லை யெனினும் சுதந்திர ஆட்சி—நம்ம சர்க்கார் என்றெல்லாம் கூறிக்கொண்டு வெள்ளையர் ஆட்சியிலிருந்ததைவிட அடக்குமுறைக் கொடுமைகளையும் போதாக்குறைக்கு வரிச் சுமைகளையும் அடுக்கிக் கொண்டே போகும் அநீதியை, மக்களின் நல்வாழ்வை விரும்புவோரும், ஜனநாயகத்தை நிலைபெறச் செய்ய எண்ணுவோரும் சுட்டிக் காட்டாமலோ கூடுமானால் தட்டிக் கேட்காமலோ இருக்க முடியாதல்லவா?

இவ்வாண்டு வரவு செலவு பட்டியலை நம்ம குட்டி சர்க்காராகிய காமராசர் அமைச்சர் குழுவும், இந்த சர்க்காருக்கு 'எஜமானர்கள்' போலயிருந்து வரும் டெல்லி சர்க்காரும் சம்பந்தப்பட்ட சட்டசபைகளிலே விரித்திருப்பதை—அதிலே காணப்படும் விவரங்களைத் தோழர்கள் அறிவார்கள் என்று நம்புகிறோம்.

காமராசர் சர்க்காரின் வருமானம் 46 கோடியே 27 லட்ச ரூபாய். செலவு 49 கோடியே 58 லட்சம். துண்டு விழுவது 3 கோடியே 31 லட்சம்! இப்படித் துண்டு விழுவதில் ஒரு பகுதியை சரிகட்ட நிலவரி தண்ணீர் தீர்வை ஆகியவைகளை ரூபாய்க்கு இரண்டணா உயர்த்தப் போகிறார்களாம்! மற்றும் புகையிலை அதன் துணைப் பொருள்களுக்கும் வரி உயர்த்தப்படுமாம்! இப்படித் துண்டுவிழும்படியான அளவுக்கு சர்க்கார் ஏதாகிலும் அதிசயிக்கத்தக்க காரியங்களை செய்யப் போகிறார்களா யெனின் அதுவும் கிடையாது.

ஏற்கனவே 5-வது வகுப்புவரை இலவசக் கல்வி கற்பிக்கப்பட்டு வருவதை 3-ம் படிவம்வரை நீடிக்க திட்டமிட்டுள்ளனர். இந்த முயற்சி உண்மையிலேயே பாராட்டக் கூடியதுதான்.

ஆனால் இதற்காக ஏழை மக்கள் மீது வரிச்சுமையை மேலும் மேலும் அடுக்குவது சரியா என்று கேட்கிறோம். சென்னை மாநிலத்திலிருந்து ஆண்டு தோறும் மத்திய சர்க்கார் வசூலிக்கும் பெரும் வரிகளிலிருந்து மான்யம் கேட்டு ஈடு செய்யக் கூடாதா? அல்லது மத்திய சர்க்காரை கடனாவது கேட்டிருக்கக் கூடாதா? அதைவிடுத்து கடந்த ஏழு ஆண்டுகளாக வாழ்க்கையில் நலிந்து அவதியுறும் மக்கள்மீது வரிப்பளுவை சுமத்துவது நேர்மையாகுமா? சுயராஜ்ய குடியரசு சட்டத்தில் சென்னை மாநில சர்க்காருக்கு, நம்மாநிலத்தைப் பொருத்தவரை அரசியல் பொருளாதார உரிமைதான் இல்லையென்றாலும் இங்கிருந்து அள்ளிக் கொடுக்கும் உயர்ந்த வரிப்பணங்களிலிருந்து அதிக மான்யமோ அல்லது கடனோ கேட்டு துண்டு விழும் வரவு-செலவு திட்டத்தைச் சரி செய்யக் கூடவா நடுங்கவேண்டும் என்று கேட்கிறோம்.

அடுத்தபடியாக 'பெத்த பெருமாள்' நிலையிலுள்ள நேரு சர்க்காரின் வரவு—செலவோ "துண்டு" விழுவதாக இல்லை பெரிய "வேட்டி"யே விழுந்திருக்கிறது! நேரு சர்க்காருக்கு வரவு 468 கோடி 76 லட்சம். செலவு 498 கோடி 93 லட்சம். துண்டு விழுவது 30 கோடி 17 லட்ச ரூபாய்!

இப்படிப் பெருந்தொகை துண்டுவிழும் வகையில் நேரு சர்க்கார் செய்த 'மகத்தான' காரியங்கள் என்னவென்றால், ராணுவத்துக்காக 202 கோடி ரூபாய் ஒதுக்கி யிருப்பதே. இந்த அவசர அவசிய காரியத்துக்காக நேரு சர்க்காரும் வரிகளை உயர்த்தியிருக்கின்றனர். இராணுவச் செலவை 202 கோடி என்பதை 172 கோடியாகக், குறைத்து வரவு-செலவை சரிப்படுத்தியிருக்கக் கூடாதா—அல்லது உயர்தர அதிகாரிகளின் ஊதியத்தையாவது குறைத்திருக்க வேண்டாமா? அதைவிடுத்து வெந்த புண்ணிலே வேல்கொண்டு குத்துவதுபோல ஏழை நடுத்தர மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படும் பொருள்கள் மீது வரிகளைச் சுமத்துவது நேர்மைதானா? நீதிதானா? அல்லது காந்தீய நெறிக்குத்தான் ஏற்றதுதானா யென்று கேட்கிறோம்.

வெள்ளையர் ஆட்சியிலே இராணுவச் செலவு சுமார் 100 கோடி ரூபாய்தானிருந்திருக்கிறது. ஆனால் அகிம்சா மூர்த்திகள் எனக் கூறப்படுகிற தேசியத் தலைவர்களால் ஆளப்படும் நம்ம சர்க்காருக்கு 210 கோடி ரூபாய் தேவைப்படுகிறதாம்.

நம்ம சர்க்கார் — என்றால் அந்தப் பாராட்டுதலைத் தெரிவிக்க யிருக்கும் மக்களின்வாழ்வை அந்த சர்க்கார் ஓரளவாவது நிலைபெறச் செய்ய வேண்டாமா? இதனை திராவிட தேசியத் தோழர்கள் ஆர அமர சிந்திப்பார்களானால் மக்களைத் தொல்லைப்படுத்தி வாழ்த்தும் இவ்வித அவல நிலையை ஆட்சி முறையிலிருந்து அறவே அகற்றலாம் என்பதே நமது எடுத்துக் காட்டாகும்.

ஆந்திராவில் தேர்தல் நிலை

(3—3—55 காலை வரையில்)

மொத்த இடங்கள் 196.

காங்கிரஸ்	...	...	58
பிரஜா சோஷலிஸ்ட்	...	...	5
கம்யூனிஸ்ட்	...	...	4
சுயேச்சை	...	...	12

நடக்க இருப்பவை

குடியேற்றம் தி. மு. கழகம்

4—3—55 வெள்ளி மாலை 6-மணிக்கு ஆற்றுத் திடலில் மாபெருங் கூட்டம் நடைபெறும். தோழர் செ. மா. அரங்கசாமி தலைமையில் தோழியர் சத்தியவாணிமுத்து பேசுவார்கள்.

இரட்டணை தி. மு. கழகம்

திண்டிவனம் அடுத்த இரட்டணை எனும் ஊரில் 5—3—55 மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

மயில்ரங்கம் தி. மு. கழகம்

வெள்ளக்கோவில் அடுத்த மயில்ரங்கத்தில், சௌந்திரபாண்டியன் அரங்கில் 5—3—55 சனி மாலை 5-மணிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் கே. எஸ். எஸ். அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், மேடைவலசு சிதம்பரனார் பேசுவர். இரவு 10-மணிக்கு தோழர் சி. முத்துசாமி தலைமையில் கல்லறையின் காட்சி, நாடகமும் நடைபெறும்.

வேலூர் (சேலம்) அண்ணா மன்றம்

5—3—55 சனி மாலை 6 மணிக்கு வ. உ. சி. திடலில், தோழர் இரா. இரத்தினசபாபதி தலைமையில் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் ஈ. வி. பி. ஆசைத்தம்பி, டி. பி. மூர்த்தி, வே. கா. இராசு. வி. எ. இலக்குமணன் ஆகியோர் பேசுவர்.

திருச்சி எடத்தெரு தி.மு.க. 2வது ஆண்டுவிழா

பாலக்கரை எடத்தெருவு மந்தை வேப்ப மரத் திடலில். ம. ரெ. இராமசாமி அரங்கில் 6—3—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு ஆண்டுவிழா நடைபெறும். தோழர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் ஈ. வி. கே. சம்பத், எம். எஸ். மணி, மதிவாணன் ஆகியோர் பேசுவர்.

மாப்படுகை (மாயூரம்) தி. மு. கழக 3-வது ஆண்டுவிழா

6—3—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு மாப்படுகை வெட்டாற்று மணற்பரப்பில் தன்மான இயக்கத் தளபதிகளில் ஒருவரான சித்தக்காடு கே. இராமையா அவர்கள் தலைமையில் தோழர்கள் என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்தரராசன் பேசுவர். தோழர் டி. எ. இராமசாமி குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்.

சி. என். பாளையம் (தெ. ஆ.) தி. மு. கழகம்

8—3—55 செவ்வாய் மாலை 5 மணிக்கு கடைவீதி யடுத்த திடலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்ட அழைப்பு

அன்புடையீர், வணக்கம், 13—3—55 பகல் 2 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறும். இதனையே அழைப்பாக ஏற்று எல்லா மாவட்ட பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

ஆய்வுக்கு வருபவை

மாநில மாநாட்டிற்கு நிதி தருதல்.

20—3—55 கண்டனக் கூட்டம் நடத்துவது கிளைக்கழக தேர்தல் (பொதுக்குழு தீர்மானம்) மாவட்ட மாநாட்டின் வரவு செலவு பரிசீலனை

குறிப்பு: இதுவே இப்போதுள்ள கமிட்டியின் கடைசி கூட்டமாகையால் யாவரும் தவறாமல் கலந்து கொள்ள விழைகிறேன்.

ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, செயலாளர்

திருத்தம்—சென்றவாரம் திராவிடனில் வெளிவந்த 'பிரதமரின் தரிசனம்' என்ற சிறுகதையில்—கரு: யசுபால்—பிண்டம்: டி. புருடோத்தமன் என வாசிக்க வேண்டுகிறோம். ஆ—ர்

திருக்குறளும் காமத்துப் பாலும்

"ஒளிர்மணி"

திருக்குறள் நூலை ஆராய்ச்சியுலகு பலவாறு முடன்று ஆராய்ந்து வந்துள்ளது—வருகிறது. இதனை ஆராயும் வழிகளும் திறனும் பலதிறப்பட்டனவாகத் திகழ்கின்றன. நூலின் கருத்தையும் அதன் மரபையும் ஆசிரியர் திருவள்ளுவனாரின் நோக்கு எத்தன்மைத்து என்று ஊன்றியவாறும் திரிபுணர்ச்சியின்றி ஆராய்வோர் ஓர் வகையினர். அந்நூலில் பாட பேதங்களும் அதிகாரணமாக இடைச் செருகல்களும் விளைந்துள்ளன என்று கொண்டு ஆராய்வோர் ஓர் வகையினர். நூலின் கருத்தையும், அதன் பொருளையும் தன் மனப்போக்கிற்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப உரையாசிரியர் ஓரிருவர் (சிறப்பாக பரிமேலழகர் உள்பட) வலிந்து பொருள் கொண்டு உரை நவின்றுள்ளமை குறித்து ஆழ்ந்து ஆராய்வோர் ஓர் வகையினர். இவ்வாறு பல திருப்பங்களில் (Turning Point) வைத்துத் திருக்குறளை ஆராய்ச்சியுலகு மேற்கொண்டு முடிவு கூறியும்—முடிவுகூற முடன்றும் வருகின்றது திருக்குறள் நூலின் கடல் போன்ற ஆழ்ந்தகன்ற வளமும் விருப்பமும் இவ்வாறு முயன்றிடுவோர்க் கெல்லாம் இடம் நல்கும் தகையது.

இவ்வகை ஆராய்ச்சிகளால் திருக்குறள் நூலின் தனித்தன்மையோ வளமோ குறைவு பெறவும், ஆசிரியர் திருவள்ளுவனாரின் திறன் கொண்ட மூலக்கருத்துக்கள் சிதைவுபடவுங் கூடியதன்று. இதுபற்றிப் பலதிறக் கருத்தினரும் கொள்கையினரும் தாம் கண்ட முடிவுகளுக்கு நூலின் சாயை [நிழல் தன்மையை] வேண்டுமானால் சார்பாக்கிக்கொள்ளலாமேயன்றி, ஆசிரியர் திருவள்ளுவனார் நூலின் மரபாகக் கொண்டு யாத்தருளிய மூலக்கருத்தை — உண்மைப் பொருளைப் பெயர்த்தெடுத்து விடவோ—குறைத்து விடவோ இயலாது. இது கொண்டால்; திருவள்ளுவர் வடநூல் தழுவி யெழுதினர், வடநூல் கருத்துக்களையே மொழிபெயர்ப்பாக்கினர் என்றெல்லாம் கூறுவோர் கூற்றுகள் கானல் நீரெனவே மளிரும்.

இஃதன்றித் திருக்குறள் நூலின் தனித் தனித் தன்மையை, ஆசிரியரின் கோட்பாட்டை மதித்தும் ஏற்றும் பொருள் காண விழைவோர் டலர். பெரும்பான்மை புலவர் பெருமக்களும் தமிழறிஞர் சிலரும் இவ்வழிபற்றி நிற்கின்றனர். இவ்வகைத்திறத்தினரால் திருக்குறள் நூல் நன்கு பரவும் வளர்ச்சியுற்றுத் திகழவுமே செய்யும். மேலும், இவ்வழி நின்று ஆராய்வதன் பயனாக அறிவு வளர்ச்சியும் புது வளமும் தோன்றும் இஃதொழிந்த பிறவழிகள் மற்றைய நூட்கள் சிலவற்றிற்கு ஏற்றந்தரவும் திருக்குறள் வளத்திற் களங்கம் காணவும் முயல்வோர் பின்பற்றுவனவாகும். இவ்வழியில் உரையாசிரியர் பரிமேலழகர் போன்றார் நின்றுள்ளதும் உளங்கொளத்தக்கதாகும். இது பற்றித் தமிழ் வல்லார் பலர் கண்டும்—கடிந்தும் வந்துள்ளனர்; வருகின்றனர்.

இனியடுத்து நாம் எடுத்துக்கொண்ட பொருட்குச் செல்வோம்.

திருக்குறள் நூலின் இறுதிப் பகுதியாகிய காமத்துப்பால் பற்றி ஆராய்வோம். காமத்துப்பால் இன்பத்துப் பால்என்பதும் வழக்கு. பெரும்பான்மை வழக்குப்பற்றிக் காமத்துப்பால் என்று வைத்தே பேசுவோம். காமத்துப் பாலின்பால், பலர்க்கும் விருப்பம் தோன்றுவதில்லை. இதனால் அதன் மாட்டுக்கவனமும் கருத்தும் பதிவதில்லை. காம நிகழ்ச்சி யென்பது கொண்டு அப்பகுதியை ஒதுக்கவும் செய்கின்றனர். காம விளைவுகள் இளைஞர்க்கே உரித்தென்று முதியோர் பலர் ஒதுக்குவர் சில புலவர்கள் நாகரீகக் குறைவாகுமென்று கவனமற்றிருப்பர். சான்றாண்மைக்கு இழுக்கெனப் புலவர் பலர் கவலையற்றிருப்பர். புகட்டவும், எடுத்தியம்பவும் முன் வருவோரின்மையால் இளைஞரும் அதனை அறிதற்கு ஏதுவிராது.

காமவிளைவுகளால் நிகழும் தீமையை எண்ணியும், அது நாகரீக இயல்பிற்கு குறைவென்று கருதியும், இடக்கரடக்கலாமென நினைந்தும் நாகுக்காகக் காமத்துப் பாலின்மாட்டுக் கவனமற்றிருக்கின்றனர். காமம் அல்லது இன்பம் என்பது குறைபாடுடைய ஒன்றன்று: அது மேன்மையும் சிறப்பும் விழுப்பமும் நல்குவதாகும். காமமின்றேல் உலகேது? நாமேது! இவ்வுண்மையை உணர்தல் வேண்டும்.

திருக்குறள் காமத்துப்பாலை அறத்துப்பால், பொருட்பால் பயின்ற நோக்கிலே நோக்குவதால் இவ்விடர்பாடுகள் தோன்றுகின்றன. இவ்வுணர்ச்சி புலவர் சிலரிடமும் தோன்றத்தான் செய்கிறது. சிலர் அந்நூலினின்றே அப்பகுதி [காமத்துப்பால்] நீக்கப் பெறுதல் நன்றெனவும் எண்ணத் தலைப்படுகின்றனர். மற்றும் சிலர் வேறு வகையில் 'கரடி விடுகின்றனர்' திருக்குறள் காமத்துப்பாலைத் திருவள்ளுவர் இயற்றவில்லை; அவருக்குப் பிற்காலத்தே தோன்றியவர் அதனையியற்றி இணைத்துளர். 'காமத்துப்பால் வடமொழி காமநூலொன்றின் மொழி பெயர்ப்பு' என்றெல்லாம் பிதற்றுகின்றனர். இவ்வகையினர் ஆராய்ச்சி யுலகின் உச்சியில் தொங்குபவர், இதுபோகட்டும், துறவின் தூய்மையையும், இல்லறத்தின் மேன்மையையும், நீத்தார் பெருமை சான்றாண்மை வரைவின் மகளிர் பிறர் மனைவிழையாமை ஆகியவற்றைக் கூறிய திருவள்ளுவர், பரத்தையர் கூட்டுறவு கூறும் காமத்துப்பாலை இயற்றுவரா! என்றெல்லாம் சிந்தனை அலைகள் சிக்கித்தடுமாறும் நிலையினருமுண்டு. இவர்கள்பற்றியே காமத்துப்பாலை அறத்துப்பால் பொருட்பால் பயின்ற நோக்கிலே நோக்குதல்...... கூடாதென்று முன்னைக் கூறனம். காமத்துப்பால் இன்பவியல்களைக் கூறும் பண்டைய இலக்கிய மரபுகொண்டு எழுந்த ஒன்றாகும். அகம், புறம் என்னும் இரண்டு கூறுபாடுகளைக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தோன்றலாயின. அகவொழுக்கம் கூறுவதே காமத்துப்பால். ஏனைய அறமும், பொருளும் புறவொழுக்கம் நவில்வனவாகும். திருக்குறள் கூறும் அகவொழுக்கமானது (காமத்துப் பால்) தூய தமிழரின் நாகரீக இயல்பிற்குச் சான்றாகத் திகழ்வதாகும். தமிழிற்கு இலக்கணம் செப்பிய தொல்காப்பியனார் வடநூல் வழிபற்றிய எண்வகைத் திருமணங்களை அகவொழுக்கமாகக் கொண்டார்.

திருவள்ளுவப் பெருந்தகையார் தொல்காப்பியரின் கூற்றைத் தழுவாது களவியல், கற்பியல் என இன்ப இயல்களை இருவகைப் படுத்தி அகவொழுக்கம் அமைத்தார். இவ்விழுமிய கொள்கையானது தமிழர்க்கும், தமிழ் மொழிக்கும் தனித்தன்மையையும், தூய்மையையும், உயர்வையும் தருவனவாகும். இஃதன்றி, வடநூல் மரபுபற்றி யெழுந்த நால்வகை [பிரமச்சரியம், கிரகத்தம், வானப் பிரத்தம், சந்நியாசம் முதலிய] நிலைகளைக் கொள்ளாது. இல்லறம் துறவறம், எனவே அறத்துப்பால் வகுத்தருளினர். பொருட்பாலிலும் தமிழரின் தனி நாகரீகத்தைத் தழுவியே திருவள்ளுவனார் நூலியற்றியுள்ளார். எனினும் இதனைப் பரிமேலழகர் போன்ற உரையாசிரியர் வலிந்து பொருள் கொண்டு நூலின் தூய்மையைக் குறைத்துக் காட்டி யுள்ளனர், இதுபற்றியே பரிமேலழகர்களுக்கு தமிழ்வல்லார் மறுப்புகள் தந்து வருகின்றனர்

காமம் என்பது வாழ்வோடு ஒட்டிய ஒன்று. நூலும் உடையும் போல, கண்ணும் பணியும் போல, கடலும் அலையும் போலக் கலந்து நிற்பது. எனவே காமத்துப்பால் கசப்புடையதன்று. பொருட் செறிவும் விழுப்பமும் நிறைந்த கருவூலமே. வாழ்விலே தவிர்க்க முடியாத வொன்றே காமம் அல்லது இன்பம். அக்தின்றேல் உலகேது?

வாழ்விலே துய்ப்பதுவுமுண்டு, துறப்பதுவுமுண்டு. துய்ப்போர் துய்க்கவும் துறப்போர் துறக்கவும் ஏதுவாக அவரவர் நிலைக்கும், பக்குவத்திற்கும், இயல்பிற்கும் ஏற்ப வாழ்வமைத்துக் கொள்ளல் வேண்டுமென்பது கொண்டே திருவள்ளுவர், துறவும்—இன்பமும் தம் நூலில் அமைத்தருளினர். இது கண்டால்; முரண் யாதுமில்லை. மேலும், திருக்குறள் காமமானது வெறும் காம நுகர்ச்சியின் பொருட்டு அமைந்த ஒன்றன்று. அது ஒருவனுக்கும் ஒருத்திக்கும் அன்பினுலேற்பட வேண்டிய கூட்டுறவைச் சில நுட்ப—நுணுக்கங்கள் கொண்டு இயக்குவிக்க எழுந்ததாகும். காமம் கரடு முரடானது, கண்ணியமற்றது, கசடு நிரம்பியது யென்றெல்லாம் பேசுவோர்; எதிர்பாராதவாறு அதன் பயனாய்த் தோன்றும் சில தீய நிகழ்வுகளை யுளங்கொண்டு செப்புவர்.

உயர்தனித் தமிழ் நடையில் அமைக்கப்பெற்றுள்ள திருக்குறள் நூலானது அதன் இறுதிப் பகுதியாகிய காமத்துப்பாலை சிறந்த இன்பக் காவியமாகக் கொண்டு திகழ்கின்றது. மேலும் அதில் தலைவன், தலைவி, தோழி, பாங்கன் எனப் பாத்திரங்கள் அமைந்தும், சம்பவங்கள் தோன்றியும் நாடகமுறைக்கேற்ப விரவிப் பல குறட்பாக்கள் திகழ்கின்றன. இதனை ஆழ்ந்தும் ஊன்றியும் கற்றலைத் திறன் கொண்டு தொடர்புபடுத்தி ஒரு நாடக நூலாகவும் யாக்கலாம்.

பெரிதும் தொடர்நிலைச் செய்யுள்களைக் கொண்டே கவிதை—காவியம் அமைந்துள்ளன: இதனையே வழக்காகவும் மரபாகவும் கொண்டுப் பிறவற்றை [குறுவெண் பாட்டு முதலாயவற்றை] நாடக வழக்கன்று யெனக் கொள்ளின் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பல, நாவடைவில் வழக்காறற்றுப் போதற்கே யிடமளிக்கும். பண்டைத் தமிழ் இலக்கியங்களுக்குப் புதுமெருகிட்டு இக்கால நிலை, வழக்கம், பழக்கம் ஆகியன புகுத்தப் பெற்று செய்யுள் வடிவிலும், உரைநடையிலும் இயற்ற முற்படுவது தவறல்லஎன்பதே என்கருத்து. இதற்கொப்பச் சிலர் அம்முறையைக் கையாண்டிருப்பதும் என் கூற்றிற்கு சான்றளிக்கும். இம்முயற்சியில் ஈடுபடுவோர் தமிழரின் மரபு, நெறி, ஒழுக்கம் நாகரீகம் முதலியவற்றில் பெரிதும் பிறழ்தலின்றிப் பிழையறக் காலம், வழக்கு இவற்றைச் சிறிதியைத்துப் பொருந்துமாறு புதுக்கலாம். இதுவே வழிநூலியற்றுவோர் கொள்ள வேண்டிய முறையாகும்.

திருக்குறள் காமத்துப்பாலை ஆராயத் தலைப்பட்ட தமிழறிஞரொருவர் "காமத்துப்பாலில் வரும் பாங்கன், தோழி என்னும் பாததிரங்கள் திருவள்ளுவரால் எண்ணியிருக்க முடியாதவை என்றும் உரையாசிரியர்கள் அதன் தொடர்ச்சியை அறியாமல் இந்தப் பாத்திரங்களை இடையூறுகப் புகுத்திச் சீர் குலைத்து விட்டனர்" என்றும் கூறுகிறார். இக்கருத்தை வைத்து அதனை (காமத்துப்பாலை) நோக்கினால் அதில் வரும் தலைவன், தலைவி என்னும் பாத்திரங்கள் (முன்னிலைப் படுத்தி மொழியுமிடங்களில்) பைத்தியங்களாகவே திகழும்.

பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள் தம் கொள்கையையும், கருத்தினையும் அறம், பொருளென்னும் இரு பகுதிகளிலும் திணித்திருக்கின்றனரென்பது உண்மையே. இதனால் நூலுக்கும் நூலாசிரியருக்கும் பாதகம் புரிந்துமுள்ளனர் ஆனால் காமத்துப்பாலில் அவர்கள் அதனைக் கையாள இடமில்லை, காமத்துப்பாலிலும் ஓரோரிடங்களில் அறியாமையும் அதன் பயனாய் மயங்குதலுங் கொண்டு பொருள் கண்டிருக்கலாம். இது அவர்களின் [உரையாசிரியர்] திறமைக் குறைவாகவே அமையும். இதுவன்றி அவர்கள். காமத்துப்பாலில் பெரிதும் தொடர்பு நோக்காதோ, கந்தர்ப்ப, அசந்தர்ப்பங்கள் பாராதோ உரை காண முயன்றிருக்கின்றனரெனக் கூறும் அத்தமிழறிஞரின் கருத்தைக் காமத்துப்பாலின் உரையை நடு நின்று நன்கு ஆராய்வோர் ஏற்கத் தக்கதன்று. அத்தமிழ்அறிஞரின் கருத்துப்படி உரையாசிரியர்முயன்றிருப்பின்காமத்துப்பால் சப்பிட்டிருக்கும். அதுவுமன்றி, காமத்துப் பாலில் வரும் தலைவன், தலைவியை முற்கூறியவாறு பைத்தியக்கார மருத்துவ மனைக்கு அனுப்புமாறு நேரும். உரையாசிரியர் 'முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும், வித்தையைக் கற்றிருந்தாலன்றி தோழி, பாங்கன் என வரும் பாத்திரங்களை மறைக்கமுடியாது. இதுவேயுமன்றி இன்னும் ஒரு குறையும் உரைகாரர் மேல்' அத்தமிழ் அறிஞர் கண்டிருக்கிறார்காமத்துப்பாலில் வரும் பரத்தை பற்றியது அது. 'தலைமகன் விபசாரக் குற்றம் புரிந்தான் என்பதாகப் பரத்தைபற்றிய நிகழ்ச்சிக்கு உரைகண்டிருக்கின்றரென்பது அக்குற்றச்சாட்டு. உரையாசிரியருக்காக நான் வக்காலத்து வாங்க முன்வரவில்லை. நான் லாயருமல்ல. ஆனால் இப்படியெல்லாம் உரைகாரர் மீது குறைகாணும் சாக்கிலே திருக்குறள் காமத்துப்பாலின் அமைப்பும் சுவையும் கெடுமாறு அத்தமிழ்அறிஞர் ஆராய்ச்சி காண்கின்றரே என்பதனால்தான் உரையாசிரியர்சார்பில் நிற்க வேண்டியவனுகிறேன்.

காமத்துப் பாலில் கவனமற்றோர் பற்றியும் காமத்துப்பால் பகுதியே பிற்சேர்க்கை; மொழி பெயர்ப்பு என்போர் பற்றியும் முன்பு கண்டோம். காமத்துப்பாலிற்கு உரைகூறியோர் செய்த 'பிழையை, ஆராய்ச்சியாக கூறும் இவரின் கருத்தை இப்போது காண்கிறோம். **போயும் போயும் ஒரேயொரு தனித்தமிழ் நூலெனத் தமிழர் பேணிப் போற்றும் திருக்குறளுக்கு இப்படி யெல்லாம் பல சூழல்கள் வருகின்றது.** இது போகட்டும்.

காமத்துப் பாலில் பாத்திரங்களாக தலைவன், தலைவியோடன்றிப் பாங்கன், தோழியுமுண்டு. பரத்தை பற்றிப் படர்க்கையில்வைத்து பெரிதும் தலைவியின் கூற்றாக வருமிடங்களுமுண்டு. மற்றும். படர்க்கையாக அன்னை [தாய்] பற்றியும், ஊரவர் [ஊர்மக்கள்] பற்றியும் தலைவி பேசுகிறாள். மேலும் சிலபொருள்களும், உயிர்களும், செய்திகளும், அநுபவங்களும் காமத்துப்பால் பாத்திரங்களின் கூற்றாக வருகின்றன. இதனைக் காமத்துப்பால் பயில்வோர் அதன்

8-ம் பக்கம்

சிறுகதை

எங்கே அவள்?

— வ. பாலசுப்பிரமணியம்

●

பண்ணிலே விளையாடும் பாவை அவள்! என் கண்ணுக்கு இன்பம் தந்து—உயிருக்கு உணர்வு தந்து—உள்ளத்துக்கு வேகந்தந்து—தாகந் தீர்க்கும் தையல் அவள்! அவள் வானகத்து மாமதி! என் மனகத்துக் கலந்துவிட்ட உயிரோவியம்! தேனகத்துச் சுவை போல் தென்னமுதாய் என் உள்ளத்தில் கலந்துவிட்டவள்! செந்தழல் போன்ற சிவந்த நிறம் கொண்டவள்! பந்தம் நீக்கி பாசம் அறுத்து—என் நேசத்துக்காக எல்லாவற்றையும் துறந்து வந்தவள்! தந்தையை மறந்து பெற்றதாயை மறந்து சுற்றத்தைத் துறந்து என்னையே சதமென்று எண்ணி வந்தவள்!

கடற்கரையிலே—கடைத்தெருவிலே—தன் உடல்வளங்காட்டி—உடைவண்ணம் காட்டி—கடைக்கண் காட்டி—நடை நளினம்காட்டி—சடைப்பின்னல் காட்டி மயக்குபவளாக அவளை நான் சந்திக்கவில்லை!

கற்பின் கொழுந்தாய், பொற்பின் இலக்கணமாய், அடக்க எனும் அருங் கலன்பூண்ட அருமருந்தாய் அவள் வீட்டிலேயே சந்தித்தேன். ஆஹா! அந்த நாளை என்னால் மறக்க முடியுமா!

மாடியில் நின்று தலையாற்றிக்கொண்டிருந்தாள் அவள். தெருவின் கோடியில் வரும்போதே பார்த்தேன். நாடி தளர, நடை தளர அவள் அழகை பருகிக்கொண்டே நடந்தேன்.

வானிலே முழுமதி தவழவில்லை பகலாக இருந்ததால்! மின்னும் விண்மீன்கள் கண்ணைச் சிமிட்டி என்னைக் கூப்பிடவில்லை! ஆனாலும் மாடியிலே ஆடி நின்ற ரோஜாவைப் பார்த்து அண்ணாந்து கொண்டே நடந்தேன். உயரப் பரந்து என் உள்ளங்கவர்ந்த அந்த ரோஜாவை முகர என் வண்டு மனம் ஒரு கணம் எண்ணியது!

தடால்!

கண்ணாடிமுகம் பார்த்து அண்ணாந்து வந்த நான் தெருவில் கிடந்த ஒரு வாழைப்பழத் தோலுக்கு இலக்கானேன்! வனிதாமணியிடம் உள்ளத்தை சரியவிட்டேன்! வாழைப்பழத் தோலிடம் உடலைச் சரியவிட்டேன். மண்டையில் நல்ல அடி. மயங்கி விழுந்தேன். அப்போது தெருவில் ஜன நடமாட்டமே இல்லை! ஐயோ என்ற இசைக்குரலொன்று மாத்திரம் ரீங்காரம் செய்வது கேட்டது.

ஒரு கணம் தான் மயக்கம்! தள்ளாடி எழுந்தேன். யாராவது பார்த்துச் சிரிக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தேன். நல்லவேளை! ஒருவரும் என்னைப் பார்க்கவில்லை. பார்த்தவளோ வெளியில் வந்தாள்!

'ஐயோ...பாவம்! கீழே விழுந்து விட்டீர்களா!' என்று கேட்டாள்.

'ஆமாம்!' என்று கொஞ்சம் கோபமாகவே சொன்னேன் நான்:

'உள்ளே வாருங்கள்! இளைப்பாறிச் செல்லுங்கள்' என்றாள் அவள்.

பதில் பேசாமல் உள்ளே சென்றேன். கெண்டை விழியாளைப்பின் தொடர்ந்ததால் மண்டை வலி கூடக் கொஞ்சம் மறந்து விட்டது.

'உட்காருங்கள்' என்றாள்.

உட்கார்ந்தேன்! உள்ளே சென்றாள் அன்னம்போல! ஐந்து நிமிடங்கள் அவளைக்காணோம், பிறகு...!

காபி சாப்பிடுங்கள் என்று உத்தரவிட்டுக்கொண்டு வெள்ளி டம்ளரில் கொண்டு வந்த காபியை என் கரங்களில் தந்தாள்.

டணார்,

காபியோடு வெள்ளி டம்ளரையும் போட்டு உடைத்தேன். மூலையில் வீழ்ந்த டம்ளர் முகங்கோணி நசுங்கிக் கிடந்தது.

சுட்டதுவோ...! என்று கேட்டாள் அவள்!

இல்லை! மின்சாரம் பாய்ந்தது என்றேன்.

இந்த வீட்டுக்கே மின்சாரம் இல்லை உங்களிடம் எப்படி வந்தது!

உன் கரத்திலிருந்து டம்ளரில் பாய்ந்து அதிலிருந்து என் உடலில் பாய்ந்தது என்றேன் நான்.

மின்சார பவர் ஸ்டேஷன் என்று எண்ணிக் கொண்டீர்களோ என்னை...!

அப்படியல்ல...ஆரணங்கே! சாந்தத்தின் உருவாகிய நீ கண்டோரைக் கவர்ந்திழுக்கும் காந்தம் என்று சொல்லாமற் சொன்னேன்,

ஆமாம்...நீங்கள்...யார்!

மனிதன்

அப்படியா!

அதில்கூட உனக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டதா!

சந்தேகத்தை எழுப்பிவிட்டவர்களே நீங்கள்தான்!

ஆமாம்...நீ...யார்!

நானா...! நான்...ஒரு மனுஷி!

ஹிஹிஹி

ஹஹஹா

உன் பெயர் என்ன!

மாதவி

குலம்

பெயரைக் கொண்டு குலத்தை அளக்கும் பேதமையை அறியாத தெரியாத மனித குலத்தைச் சேர்ந்தவள் நான்.

மன்னிக்கவேண்டும்

மன்னித்தேன்

உனக்குப் பெற்றோர் இல்லையா!

இருக்கிறார்கள்

இப்பொழுது எங்கே!

ஊருக்குப் போயிருக்கிறார்கள்.

ரொம்ப நலமாய்ப் போய்விட்டது.

எதற்கு!

வந்து...வந்து...அதற்கில்லை! அவர்களிருந்தால் நீ...மாடிக்கு வந்திருக்க மாட்டாய். மாடிக்கு நீ வராவிட்டால் நான் உன்னைப் பார்க்க நேர்ந்திருக்காது. நான் உன்னைப் பார்க்காமல் வந்திருந்தால் கீழே விழுந்திருக்க மாட்டேன், கீழே விழாமலிருந்திருந்தால் இப்படி ஆனந்தமாய்ப் பேசிக்கொண்டிருக்க முடியுமா!...அதற்குச் சொல்ல வந்தேன்,

சரிதான்...கீழே விழுந்து விட்டீர்களே என்று பரிதாபப்பட்டு உதவி செய்ய வந்தால்...நீங்கள் ஏதேதோ பேசுகிறீர்களே.

பேசுவதென்ன மாதவி! உறுதியாக சொல்லுகிறேன் உண்மையாகச் சொல்லுகிறேன். நான் உன்னையே...

ஊம்!...கண்டதும் காதல் என்பது இதுதானோ!

இதுவேதான்:

நான் உங்களை விரும்பவில்லையே!

விரும்ப வில்லையா!...ஏன்!

இதென்ன கேள்வி! உங்களைக் கண்டதும் எனக்கு காதல் ஏற்படவில்லை! அவ்வளவுதான்!

கண்டதும் காதல் ஏற்படாவிட்டால் போகிறது! இப்போ பேசியும் விட்டோம்! இன்னும் காதல் ஏற்படவில்லையா!

இல்லை!

காதல் என்பது சாராயம் போன்றது மாதவி! சாராயத்தைக் குடித்ததும் மயக்கம் ஏற்படும், அதுபோல கண்ணோடு கண்ணினை நோக்கினாலே காதல் தானாக ஏற்படும்!

அப்படி இல்லை அன்பரே! காதல் என்பது மயக்கம் தரும் போதைப் பொருளல்ல! அன்பிலே, பிறந்து பண்பிலே வளர்ந்து இன்பத்துக்குக் கருப்பொருளாய் இனிமைக்கு விழுப் பொருளாய் இருக்கும் காயகல்பம் போன்றது காதல்!

ஒப்புக்கொள்கிறேன், இப்பொழுதாகிலும் என்னைக் காதலிக்கிறாயா?

ஊஹும்!

சரி! நான் வரட்டுமா?

மேளதாளத்தோடு போய் வாருங்கள்!

என்னைப் போகச் சொல்கிறாயா! உண்மையாகவா?

ஆமாம்! ஆமாம்!

போய் வருகிறேன் மாதவி! பள்ளத்துக்கு ஓடிவரும் வெள்ளம் போலப் பாய்ந்து வந்தேன், அணைபோட்டுத் தடுத்து விட்டாய், பாலையில் நடந்து வந்த நான் சோலையைக் கண்டேன். 'சோலையில் நுழையாதே' என்று சொல்லி நிறுத்தி விட்டாய், போகிறேன் மாதவி, போகிறேன்.

நான் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பினேன், குரல் பாய்ச்சி ஒருமுறை அழும்வண்டும் போல் தோன்றியது எனக்கு! பரிதாபமாக அவளைப் பார்த்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தேன். அவள் ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தேன் நான், வாய்மூடி மௌனியாய் அவள் சிலைபோல் நின்றாள் உயிரையும் உணர்வையும் அவளிடத்தே வைத்துவிட்டு என் உடல் மாத்திரம் நடந்து கொண்டிருந்தது

இன்னொரு நாள்! மாதவியைக் கடைத் தெருவிலே சந்தித்தேன். கையிலே பையோடு காய்கறி வாங்க வந்திருந்தாள் அவள். என்னைக் கண்டதும் நாணிக் கொண்டு கூட்டத்துள் நுழைந்தாள் நான் பின் தொடர்ந்தேன் ஒரு ஓரத்தில் போய் நின்றாள். நான் பேச்சற்று அவள் எதிரே போய் நின்றேன்.

மாதவி கடுகடுத்த முகத்தோடு என்னை 'மறந்து விடுங்கள்' என்றாள்.

இந்த உலகில் என்னால் ஆகாத காரியம் இது ஒன்றுதான் மாதவி! என்றேன் நான்.

எனக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது!

ஆ...!

ஏன் திகைக்கிறீர்கள்!

திகைக்காமல் என்ன செய்யச் சொல்லுகிறாய் மாதவி...யாருக்கு உன்னைக் கொடுக்கப்போகிறார்கள்...மாதவி ஐயோ...மாதவி!

ஒரு கிழவனுக்கு!

ஐயோ...என் ஆசைக்கிளியே! மாசிலாதமாணிக்கமே! நாடி நரம்பு தளர்ந்த கிழவனுக்கா உன்னை பலியிடப் போகிறார்கள்! ஐயோ...என் கட்டிக் கரும்பே கனியே! பனிமலரே! என் குடும்பவிளக்காக இருந்து என் இடும்பையெல்லாம் தீர்ப்பாய் என்று எண்ணியிருந்தேனே, என்ன செய்வேன் மாதவி!

அதுதான் எனக்கும் புரியவில்லை.

நான் ஒன்று சொல்கிறேன்...கேட்கிறாயா!

ஊம்

நீ என்னுடன் வந்துவிடு,

எங்கே!

கண் காணா இடத்துக்குப் போய்விடுவோம்.

போய்...!

வாழ்வோம்,

அப்பா...அம்மா...

இனி எல்லாம் நான்தான் என்று எண்ணிக்கொள்! பயப்படாதே. பெற்று வளர்த்துப் பாராட்டிச் சீராட்டிக் கொஞ்சிக் குலவியவர்கள்தான்... உன்னைக் கிழவனுக்கு மணம் முடித்து மகிழப் பார்க்கிறார்கள், நான் இருக்கிறேன் பயப்படாதே!

சரி...

கூண்டிலிருந்து விடுபட்ட ஜோடிக் கிள்ளைகள் போல பறந்து யார் கண்ணிலும் படாது தப்பிப்போய் வேற்று நாட்டிலே வாழ்ந்தோம். யாழும் குழலும் சேர்ந்து ஒலித்தால் எவ்வளவு இனிமையாக இருக்கும்! தேனையும் பாலையும் கலந்துசுவைத்தால் எவ்வளவு அருமையாக இருக்கும்! நானும் மாதவியும் வாழ்ந்த வாழ்வு அப்படித்தானிருந்தது.

இவ்வளவு சீக்கிரம் எங்கள் இன்ப வாழ்வுக்கு முடிவு ஏற்படும் என்பதை நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. ஓராண்டுக் காலம் ஒருயிராய் ஈருடலாய் வாழ்ந்த அந்த இன்ப வாழ்விலே நாங்கள் கண்டபலன்! ஒரு பெண் குழந்தை! தானும் இறந்து பிறந்தது. போகட்டும்! தாயின் உயிரையுமா பறித்துக் கொள்ள வேண்டும்!

ஐயோ! அவள் போய்விட்டாள். மாடியிலே ஆடி நின்று என் மனதைக் கவர்ந்த ரோஜா கருகி உதிர்ந்து விட்டது. மணம் பரப்பிய மல்லிகை உதிர்ந்து உலர்ந்து என்னைப் பிணமாக்கிவிட்டுப் போய்விட்டது! எங்கே என் மாதவி! எங்கே அவள்! ●

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினால் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40-நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னாருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினாலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை, சாப்பிடக்கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன்	1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூ,	6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன்	1—11—0

என். பி. செல்வம் & கோ.

16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1



அஸ்திவாரம் தவறான தற்காலக் கல்விமுறை ஒருபோதும் மாறாத 'கல்லுப் பிள்ளையாரே!'

அன்புள்ள சேகர்,

எழிலும் இன்பமும் நிறைந்த இளமைப் பருவம் என்றும் 'சிரஞ்சீவி'யாக இருப்பதற்கில்லை. அலை அலையான மோனக் கனவுகளை நெஞ்சத் திரையில் நிழலாட்டம் போட்டுக் காட்டிய வாலிபத்தின் மிடுக்கும் கம்பீரமும், மங்கி, தேய்ந்து, மறைந்துபோகக் கூடியவைதான்! ஆனால், 'குருகுரு நடந்து சிறுகை நீட்டிய' அழகொழுகும் பிள்ளைப் பருவத்தில் நாமாகச் சேர்த்து வைத்துக் கொண்ட—அல்லது அனுபவத்தின் வாயிலாக நமக்கேற்பட்ட 'நினைவுச் சுழல்'களின் ரீங்காரம் இருக்கிறதே அவைகளில் ஓரிரண்டாவது நாம் பிணமாகிப் போகும் கடைசி வினாடி வரையில் ஒலித்துக் கொண்டே இருக்கும். சுற்றுச் சார்புச் சூழ்நிலைகள் வெகுவாக மாறிவிட்ட நேரத்திலும், இளமைப் பருவத்து நினைவுகள் 'அசல் அழகு' குன்றாமல், பாரம் நிறைந்த நமது நெஞ்சை லாவகமாக நெருடிக் கொடுக்கும்!

இளமைகளில் நடக்கெதிர்ப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் நினைவும், வயோதிக காலத்தில் எவ்வளவு ஆறுதலளிக்கின்றன! நெருப்பெனக் கொதித்த ஆற்று மணலில் 'பிகு' விடாமல் நடந்து போய், நடு ஆற்றில் நடக்கும் போது மேல் வெள்ளம் சீறிப் பாய்ந்து வருவதைக் கண்டதும் இரண்டே தாவுதாவி கரைசேர்ந்தோமே அன்றோர் நாள், அதை நீ மறந்துவிட முடியுமா? அல்லது காலைக் கொப்பளிக்க வைத்துவிடும் சுடுமணலில் இறங்கி நடந்து 'வீரம்' காட்டினது உன் மாமன் மகள் குமுதாவுக்காகவே என்பதை நினைத்துப் பார்க்கும் போது உனக்கு எவ்வளவு வெட்கங் கலந்த இன்பம் உண்டாகிறது?

இவைபோன்ற 'இளமை நினைவுகள்' எத்தனையோ இரவுத் தூக்கத்தைக் கொடுமையான முறையில் கொள்ளையிட்டுச் செல்கின்றன. நீ எழுதியிருக்கும் கடிதம் வேறு, அதற்கு எண்ணெய் ஊற்றி பெருங்கனல் கிளம்ப 'பாதை' வகுத்துக் கொடுத்திருக்கிறது!

*

சிவாஜி, அக்பர், கிளைவ் ஆகிய மூவரின் வரலாறுகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அளந்து கொட்டிவிட்ட பெருமையில் ஆசிரியர், நம்மையெல்லாம் ஒரு சுற்று 'அரிமா நோக்கு' நோக்கிக் கொண்டே வந்த போது, நீ மட்டும் ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருந்தாய். அடங்காக் கோபம் கொண்ட ஆசிரியர், நான் சொன்ன மூவரில் 'உனக்குப் பிடித்தவர் யார்' என்று கேட்ட போது நீ கொஞ்சமும் தயங்காமல், **ஜான் பால் ஜோன்ஸ்**, சார், என்று சொன்னாய்! எல்லோரும் வாயைப் பிளந்து நின்று விட்டோம். ஆசிரியருக்கும் நீ குறிப்பிட்ட பெயரே இன்னதென்று புரியவில்லை. பாடப் புத்தகத்தில் குறிப்பிட்டிராத பெயரை வகுப்பறையில் உபயோகித்த 'குற்றத்திற்காக' என்ன தண்டனை உனக்குக் கிடைத்தது என்பதெல்லாம், அவ்வளவு முக்கியமானதல்ல, ஆனால் நீ அன்று குறிப்பிட்ட ஜான் பால் ஜோன்ஸ் என்பவனை ஒவ்வொரு துறையிலும் 'காப்பி' அடிக்க முயற்சி செய்வது தான் எனக்கு வியப்பாக இருக்கிறது!

ஜான் பால் ஜோன்ஸ்! அடேயப்பா, அவனத்தனை நெஞ்சத் துணிவு நமக்கெல்லாம். 'பகிரதத் தவம்' செய்தாலும் கிடைக்குமா. சேகர்! அமெரிக்கப் படைகளின் 'சப்தநாடிகளும்' அடங்கி ஒடுங்கி விட்ட நேரம் அது. ஆங்கிலப் படைகளின் கரம் வலுத்தது. ஜார்ஜ் வாஷிங்டனையே பித்தனாக்கி விட்டிருந்த காலம். பிரஞ்சுப் படைகளின் வரவை, ஒவ்வொரு வினாடியும் அமெரிக்க மக்கள் பஞ்சடைய எதிர்பார்த்து நின்றிருந்த தருணம். அந்த இக்கட்டான நேரத்தில், ஆங்கிலத் தளபதி ஒருவன், அமெரிக்கப் படைகளில் ஒரு பிரிவுக்குத் தலைமை வகித்துப் போரை நடத்திக் கொண்டிருந்த ஜான்பால் ஜோன்ஸ் என்பவனை உடனே சரணடையுமாறு 'உத்தரவு' பிறப்பித்திருக்கிறான். தன்னுடைய பரிதாபகரமான நிலையை எண்ணி வேறு எந்தத் தளபதியாக இருந்திருந்தாலும், சரணடைந்திருப்பான் அல்லது அழிந்துபடும்வரை—நடத்துவதாக சூள் உரைத்திருப்பான். இந்த இரண்டிலும் எதையுமே கையாளவில்லை, ஜோன்ஸ். ஆங்கிலத் தளபதிக்கு அவன் அளித்த பதில்: **"நான் இன்னும் சண்டை செய்யவே ஆரம்பிக்கவில்லை. அதற்குள் சரணாகதிப் பேச்சுக்கு என்ன வேலை?**

இப்படிச் சொன்ன துணிச்சலான பதில்தானே, உன்னையும் என்னையும் அவனை முன்மாதிரியாகக் கொள்ளும்படி ஆக்கிவிட்டது!

அவன் கொடுத்த அதே பதிலை நான் எழுதிய கடிதத்திற்கும் எதிர்அடி கொடுத்திருக்கிறாய்!

*

கல்வி முறையைப்பற்றி என் கருத்து என்னவென்பதைச் சொல்வதாக நான் குறிப்பிட்டிருந்தேன். **"நம்போன்ற இளைஞர்கள் விவாதித்துப் பேசி தெளிவு படுத்திக் கொள்ளும் அளவுக்கு, கல்வி முறையைப்பற்றி இந்த நாட்டிலே தெளிவு வந்து—நிச்சயமான தூமான முறை வகுத்துக் கொடுக்கவில்லை என்பது கூட பெரிதல்ல—அத்தகைய முறையொன்று நாட்டுக்கு அவசியந்தானா என்றல்லவா நமது தலைவர்கள் இன்னமும் விவாதத்திலேயே ஆழ்ந்து கிடக்கிறார்கள்?"**

இந்த ரீதியில் எதிர்க் கேள்வி கேட்டு என்னை மடக்கிவிட நினைக்கிறாய்.

சேகர். ஆங்கில தளபதிக்கு அமெரிக்க ஜோன்ஸ் அனுப்பிய துணிவான பதிலில் அர்த்தமும் பிரச்னையை கவனித்துப் பார்த்த பண்பும் இருப்பதாகத் தெரியவில்லை. அவனுடைய வைரநெஞ்சு எப்படிப்பட்டது என்பதொன்றே வியப்புக்குரிய விஷயம்,

"நீ எழுதிய கடிதத்தில், உன்னைத்தான் ஜோன்ஸ் என்று கற்பனை செய்துகொண்டாயே தவிர, நான் ஆங்கில தளபதியல்லவென்பதை நினைத்துப் பார்க்கத் தவறிவிட்டாய்.

கல்வி முறைபற்றி தலைவர்கள் விவாதித்துப் பேசி முடிவெடுத்த பின்பு, நம் போன்றவர்களின்

பட்டமல்ல நாட்டினைச் சீராக்குவது; அதைக் கொடுக்கும் தூய்மை உள்ளங்கள்

கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது நல்லதென்ற பொருளில், நீ கடிதம் எழுதியிருக்கிறாய். நான் சொல்கிறேன், நம் போன்றவர்கள், அதில் தலையிட்டு கொஞ்சம் 'குட்டையைக்குழப்பினால்' ஒழிய கல்விமுறைக்கு விமோசனம் ஏற்படப் போவதில்லை. காரணம், அஸ்திவாரத்தைப்பற்றி யாருமே கவலைப்படக்காணோம். மேலெழுப்பும் கட்டடம் எத்தகைய வசதிகளைக் கொண்டதாய் இருக்க வேண்டுமென்பதில்தான் இப்போது அனைவரும் அடிதடி சண்டை நடத்தி வருகின்றனர்!

கல்விமுறையில் உள்ள சில அடிப்படைக் கோளாறுகளைக் கவனிப்போம்.

சமுதாயம் முழுமைக்குமான நலனை முன்னிட்டு ஒவ்வொரு மனிதனும் கற்றவனாகத் திகழ வேண்டும் என்பதுமாறி, கல்வி கற்கும் உரிமையை அவனவன் வசதிக்கும் வாய்ப்புக்கும் உகந்த மாதிரியில் விட்டு வைத்திருப்பது முதலாவது ஆபத்து.

தனிப்பட்ட ஒருவனின் எழுத்தறிவிலே, சம்பந்தப்பட்ட நபரை விட அரசாங்கம் அதிகமான அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அக்கறை எடுத்துக் கொள்வதற்கு இடைஞ்சலாக எவையிருப்பினும் அவைகள் தூக்கி எறியப்பட வேண்டும். ஏனென்றால், படிப்பு வாசனையுள்ள ஒருவன், தான்மட்டும் 'நாலு காசு' சம்பாதித்து கண்ணியமாக வாழ்வதுடன் நின்றுவிடுவதில்லை. அவன் பண்பட்ட பிரஜையாகவும் மாறிவிடுகிறான். மனச்சாட்சி என்பதற்கு இலக்கணம் தெரிந்துகொள்கிறான். அரசாங்கத்துக்குத் தொல்லை கொடுக்கும் அளவுக்கு அவனுடைய உணர்ச்சிகள் மட்டரகமானவைகளாக ஆகிவிடாமல் பாதுகாத்துக் கொள்கிறான். அனைத்துக்கும் மேலாக மற்றவனுக்கு வழிகாட்டியாகவும் அமைந்து விடுகிறான். இங்கிலாந்திலே காணப்படும் நேர்மையும் நாணயமும் இதன் அடிப்படையில் எழுந்தவைதான்.

படித்தோர்களுக்குச் சரியான பாதுகாப்பு அளிக்காமல் இருப்பதும் கல்வி முறையில் உள்ள இரண்டாவதான ஆபத்து.

'சுயராஜ்யம்' பெற்ற குஷியில் எதைச் செய்கிறோம் என்பதே தெரியாமல் சிலபல காரியங்களை எக்கச் சக்கமாகச் செய்துவைத்து விட்டிருக்கின்றனர், இன்றைய காங்கிரஸ் ஆளவந்தார்.

பின்விளைவைக் கவனிக்காமல் மளமளவென இன்சினீயரிங் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், மற்றும் பலதரப்பட்ட தொழில் நுணுக்கக் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. அரசாங்கம் துவக்கியது போதாதென்று தனிப்பட்டோர் கல்லூரிகளும் தாராளமாக அனுமதிக்கப்பட்டன. அத்துடன், ஆங்கிலேயர் மேலிருந்த கோபத்தினால், அவன் வகுத்து வைத்த பல 'விதிமுறைகள்' கல்லூரி பட்டப் படிப்பிலே தளர்த்தப்பட்டன. இவைகளுடன் கூடவே திறமை வாய்ந்த பயிற்சி இல்லாமையும் வளர்ந்து வந்தது.

இதன் விளைவு என்ன? குபுகுபெனப் பட்டதாரிகள் பெருகினார்கள்; தொழில் 'வல்லுனர்கள்' கள் அதிகமாகிவிட்டனர்.

கல்லூரியை விட்டு வெளிவரும் அனைவருக்கும் வேலையில்லை! கல்வித்துறையை மட்டும் தனியான கூறுபோட்டு வேகத்தை முடுக்கி விட்டனர். அடுத்த கட்டத்திற்குத் தேவையான, கணிசமான தொழிலகங்களை வளரவிடவில்லை. டாக்டர்களை அதிக அளவில் உற்பத்தி செய்து தள்ளிய அரசாங்கம், அவர்கள் வேலை செய்வதற்கு போதுமான மருத்துவ மனைகளை கட்டவில்லை. அவர்களுக்குச் சம்ப

13-ம் பக்கம்

திருக்குறள் காமத்துப்பால் : கற்கவும் கேட்கவும் இன்றியமையாததாகும்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

[நூலின்] மரபறிந்து காணின் அறியக் கூடும்.

காமம்—காதல்—இன்பம் என்பன ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து பெறும்—அனுபவிக்கும் ஒரு வகை உணர்ச்சியென்பதை உளங்கொண்டு அது தலைவன் தலைவியோடன்றிப்பிறர் அறியக் கூடாத மறைவான செய்தி என்றுகருதியே அத்தமிழ் அறிஞர் பாங்கன் தோழி என்னும் பாத்திரங்கள் மிகையென்றும் இடையூறனவை யென்றுங் கருதுகிறார் போலும். இது கொண்டால் தமிழரின் பண்டைய அகவொழுக்கத்தையும் நாகரீகத்தையும் எடுத்துக் காட்டும் தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஒதுக்கித் தள்ளுமாறு நேரும். வெறும் கலவியொன்றையே குறியாகக் கொண்டெழுந்த ஒன்றன்று தமிழரின் அகவொழுக்கம். இன்பம் துய்க்க கலவியே குறியாகக் கொண்டு விலங்கினங்களும் பறவைகளும், பிறவுயிர்களும் புணர்ச்சியில் இயங்குகின்றன மாந்தரினும் பெரும்பான்மையோர் இது போல் வாழ்க்கை நிகழ்த்தவே செய்கின்றனர், இது இன்ப இயல் பற்றிய நாகரீகத்தைக் காட்டுவதன்று.

அவ்வப்போது உணர்ச்சியைக் கழித்துக் கொள்ளும் நாடோடி—வம்பாடினை ஒழுக்கமாகவே கொள்ளத் தக்கது இம்முறை. ஒருவனும்ஒருத்தியும் தனித்துக் கூடிச் செய்யும் கலவிக்கு இலக்கியம் தேவையில்லை. இலக்கியமென்பது குறிக்கோளைக்காட்டுவதாகும். 'இலக்கு என்னும் சொல்லின் அடியாகத் தோன்றிய ஒன்றே இலக்கியமென்பது.' 'இலக்கு என்பது இடம் என்பதைக் குறிக்கும். இன்றும் அச்சொல் 'லக்கு என்றுத் திரிபுற்றுச் சில பகுதிகளில் வழக்காகவுள்ளது. இது இடம்பற்றிப் பயன்படுத்தப்படும் சொல்லேயாகும். இதனை வடமொழியில் லக்ஷியம் என்பர் வடமொழியில் வழங்கும் லக்ஷியம் என்னும் இச்சொல்லிற்கு அடைய வேண்டியவிடம் எனப் பொருள் விரிப்பர். நாம் இதனைக் குறிக்கோள் என்போம்.

குறிக்கோளென்னும் இத்தமிழ்ச் சொல் அடையவேண்டியவிடம் என்னும் பொருள்வளங் கொண்டது. இலக்கு வெனவரும் வழக்கை யொட்டி நூல் முறையில் வரும்போது இலக்கியமென விரிந்தது. இம்முறையில் ஆராயும்போது மக்கள் அடைய வேண்டிய இலக்கு அல்லது இடம் குறிப்பனவாகும் இலக்கியமென்பது. இதன் பயனைக் குறிக்கோளெனக் கொள்கிறோம், முற்கூறியவாறு குறிக்கோளென்பது அடைய வேண்டிய விடத்தைச் சுட்டும் அடைய வேண்டியவிடம் செல்ல வழி துறைகள் வேண்டுமல்லவா; வழிதுறையறியாது கரடுமுரடானகாடுமேடுகளில் சென்று தவிக்கவும் துயரமெய்தவும் கூடாதல்லவா?

அதன் பொருட்டே மக்கள் தாமடைய வேண்டியவிடம் யாதென்பதைச் சுட்ட வழிதுறைகள் வகுத்துக்காட்ட இலக்கியங்கள் தோன்றலாயின எனவே வாழ்வின் பயனை வழிமுறைகளோடு யெடுத்துக் கூறவந்தனவே இலக்கியங்கள். அறம், பொருள், இன்பம் அனைத்திற்கும் குறிக்கோளுண்டு. இம்முறையில் திருக்குறள் காமத்துப்பாலும் ஒரு குறிக்கோள் கொண்டு அமைந்ததாகும் அக்குறிக்கோளும் நாகரீக வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எண்ணங்களை வளர்த்து அதனடியாகத் தோன்றும் இயல்பு பண்பாடுகளைக் கொண்டனவாகும். இம்முறையில் வழிவகுத்துக் காட்ட எழுந்த ஒன்றே காமத்துப்பால். காமத்துப்பாலில வரும் பரத்தை என்னும் பாத்திரம் தலைமகனுக்கு ஒழுக்கக் குறைவையும் இழிவையும் கற்பிப்பதாக இருக்கிறதென்னும் எண்ணங்கொண்ட அத்தமிழ் அறிஞர் கருத்தை இனிக் கவனிப்போம்.

நுணித்தும்—ஆழ்ந்தும் நோக்குவோமானல் காமத்துப்பாலில் பரத்தைபற்றிய பேச்சுத் தோன்றுவதன் உண்மை புலனுகும். காதலரிடையே உவகையும் இன்பமும் பெருக ஊடல் இன்றியமையாதது. ஊடல் என்பது காதலரின் மாட்டுப் போலியாகத் தோன்றும் ஒரு வகைப் பிணக்கு. இப்பிணக்கும் பெரிதும் தலைமகளிடத்திலின்றே தோன்றுவது மரபு போலியாகத் தோன்றும் பிணக்கிலே வருவன பலவும் போலியானதாகவே இருக்கும். இல்லாத ஒன்றையிட்டுக் கட்டுவதும், தவறின்றி யொழுகும்போது தவறிழைத்ததாகப் பகர்வதும், மற்றும்; பொருந்தாக்குறைகள் பல சொல்வதும் ஊடல் அல்லது பிணக்கிலே பெரிதும் தலைமகள் கூற்ருக வரும். இது பற்றி நாம் இலக்கியங்களைக் கூட ஆராய வேண்டுவதில்லை. பருவக் காதலர்—கணவன் மனைவியரிடையே இயல்பாகவே நாள்தோறும் நிகழும் அனுபவமுங்கூட. இது இல்லாத மணவாழ்க்கை மிக அரிது. எனவே இவ்வாறு தோன்றும் ஊடல் நிகழ்விலே பரத்தை எனும் ஒரு பாத்திரம் படர்க்கையில் தோன்றுகிறது. இப்படி யொரு பாத்திரத்தை தலைமகள் கூற்ருக வைத்துப் பேசப்படுகிறதேயன்றித் தலைவன் அவ்வாறு பரத்தையின் கூட்டுறவு கொண்டு இயங்கினன் என்பதற்குக் காமத்துப்பாலில் சான்றேதுமில்லை.

திருக்குறள் காமத்துப் பாலில் பரத்தை பற்றிய பேச்சு ஊடல்—உவகையின் பொருட்டு வருகிறதேயன்றித் தலைமகன் பரத்தையில்லில் புகுந்தான் இருந்தான் என்பதற்கான சம்பவங்களோ சான்றுகளோ கிடையாது. இது நோக்கின் தலைமகன் கூடாவொழுக்கம் கொண்டவனென்று கூறுதற்கிடனில்லை மற்றும், இன்ப இயல் கூறும் காமத்துப்பால் ஒருவனும் ஒருத்தியுமெனத் தலைவன் தலைவியென்னும் இருபாத்திரங்களோடன்றித் தோழி, பாங்கன் என்னும் பாத்திரங்களைக் கொண்டும் நிகழ்வதுயென முன்பு கண்டோம். தோழி, பாங்கன் யென்னும் இப்பாத்திரங்கள் தலைவி, தலைவன் இவர்களின் உயிர் நட்பாகவும், அவர்களின் [தலைவன் தலைவி] வாழ்க்கையில் கவலை கொண்டனவாகவும் அமைந்திருப்பன, இதற்கோர் சான்றுங் காண்போம்.

தலைவியிடம் நேரில்கூறின் அவளுக்கு கவலைமிகும்யெனக்கருதிய தலைவன் தன் பிரிவுபற்றிதோழிபால்அறிவிக்கின்றான். இதுகேட்ட தோழி தலைவியையும் மிஞ்சிய அன்பும் பற்றுங்கொண்டு உரிமை மிக்குற்று ; செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்குரை; என்கிருள். இத்துணைப் பற்றும், உரிமையும் கொண்ட தோழியின் கூற்றை நோக்கின் அப்பாத்திரங்களின் பழமையும் [வழிவழியே வந்த உயிர் நட்பு] இணைப்பும் பிணைப்பும் அறியலாம். இடக்கரடக்கல் வைத்துப் பேச வேண்டியவாறு வேற்றுமைப் பட்ட—அயலார் போன்ற பாத்திரங்களல்ல காமத்துப்பால் கூறும் பாங்கன் தோழியர்.

தலைவன் தலைவியரிடையே அன்பையும், இன்பத்தையும் கூட்டுறவையும் வளர்க்கத் தோன்றிய பாத்திரங்களே பாங்கன், தோழி யென்பன உற்று நோக்கின் காமத்துப்பாலில் தலைவன் தலைவி கூற்றுக்களன்றித் தோழியின் கூற்றுக்களும் வருகின்றன. ஆனல் பாங்கனின் கூற்று அரிது. இல்லையென்றே கூறிவிடலாம். பாங்கனை முன்னிலைப்படுத்தித் தலைவன் கூற்ருக வருகின்றனவே யன்றிப் பாங்கன் கூற்றுயில்லை யெனலாம். இது பண்டைய ஒழுகலாற்றையும் நூல்முறையையும் வைத்து மரபாகக் கூறப்பட்டன வென்பதற்கு ஒரு சான்ருகும் இஃதேயன்றிப் பரத்தை பற்றிப் படர்க்கையில் வைத்துத் தலைவி பேசுகிருளேயன்றி, இதுபற்றித் தலைவன் கூற்ரே, அன்றிப் பரத்தை கூற்ரு கிடையாது. இதுவும் நூல்மரபின் நுட்ப—நுணுக்கங்களுக்கு மற்ருேர் சான்று, மேலும், தலைவன் தலைவி தோழி, பாங்கன் யென்னும் இப்பாத்திரங்களில், நவில்தல் ஏதுமின்றி வெறும் பாத்திரமாக மட்டும் திகழும் பாங்கனை யொழித்து; வினவுதலும், பகர்தலும், விடையிறுத்தலுமன்றித் தனித்து நின்றும் எண்ணவும்—பேசவும் செய்யும் தலைவன், தலைவி, தோழி என்னும் இப்பாத்திரங்களின் கூற்றுக்களிலும், செயல்களிலும் சிந்தனைகளிலும் முறை கேடோ நாகரீகக்குறைவோ தோன்ருது, எண்ணங்களின் வளர்ச்சியில் வளமும், அறிவுத் திறனும், கற்டனைச் செறிவும் நிறைந்து திகழ்வது உய்த்துணரற்பாலதாகும். இவ்வகையில் விழுப்பமும் செறிவும் நிரம்பிய ஒன்றே காமத்துப்பால்.

நீத்தார் பெருமை, ஒழுக்கமுடைமை துறவு, சான்ருண்மை முதலாய சிறப்பியல்புகளை யெடுத்தியம்பிய திருவள்ளுவர்; புணர்ச்சி முதலாய உணர்வுகளையும் பரத்தையின் கூட்டுறவையும் பகரும் காமத்துப்பாலை இயற்றுவாரா! இயற்றலாமா! என்றெல்லாம் முற்கூறியவாறு ஐயப்பாடுகளெழும், எழவும் செய்கிறது. இதுபற்றிக் காமத்துப்பாலை ஊன்றியாராயின் உண்மை புலனுகும். திருக்குறள் காமத்துப்பால் திருவள்ளுவரால் இயற்றப்பட்டதேயாயினும் அது [காமத்துப்பால்] முழுதும் திருவள்ளுவரின் கூற்ருக வைத்து எடுத்தியம்பப் படுவதன்று. காமத்துப்பாலில் வரும் பாத்திரங்களான தலைவன் தலைவி தோழி இவர்களின் வாயிலாக வைத்து [பாத்திரங்களின் கூற்ருக] இயம்பப்படுவதாகும். எனவே திருக்குறள் காமத்துப்பாலில் வரும் பாத்திரங்கள் பேசுகின்றனவே யன்றித் திருவள்ளுவர் பேசவில்லை இவ்வுண்மையை முதலில் மனத்திலிறுத்திய பின்னரே காமத்துப்பாலை பயில்தல் வேண்டும்

மற்றும் காமத்துப்பால் பாத்திரங்கள் யாவும் கற்பனையே. இதுபோல் அப்பாத்திரங்களின் எண்ணங்கள் உணர்ச்சிகள் கருத்துகள் நிகழ்ச்சி முதலாய செயல்களும் கற்பனையே, மேலும் இதனடியாக எழும் நவில்தல், வினவுதல், விடையிறுத்தல் முதலாய கூற்றுக்களும் கற்பனையேயாகும். திருவள்ளுவர் தம் கூற்ருக நவில்தல் அறம் பொருள் யென்பனவே ஆகவே இன்பவியல்பற்றிய, காமத்துப்பாலை தம் கற்பனைத் திறன் கொண்டு அதில்வரும் பாத்திரங்களையும் அதனடியாகத் தோன்றும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் நிகழ்ச்சி செயல் ஆகியவற்றையும் பாத்திரங்களின் மேலேற்றிக் கூற்ருக்கியுள்ளார். தம் கூற்ருக நவில்வாராயின் பரத்தைபற்றிய பேச்சும், தம்இயல்பிற்கு ஒவ்வாத பிற நிகழ்ச்சி உணர்ச்சி செயற்பாடுகளும் கூறுதல் குறைவு இழுக்கு என யெடுத்துக் கூறவிழைவோர்க்குச் சறறிடம் தர ஏதுவாக அமையும். அஃதின்றிக் கற்பனையாக வடிவமைத்துக் காமத்துப்பால் பகுதியை அமைத்திருப்பது அவர்தம் நூலியற்றும் திறனுகும் சான்ருண்மைக்கும் எடுத்துக் காட்டாகும்.

மேலும் இன்ப இயல்பற்றிக் கூறும் காமநூலியற்றும் மரபும் முறையும் தழுவுதல் ஒரு கவியின் கடமையாகும். இக்கடமையினின்று திருவள்ளுவர் தவறுவாராயின் அவரைக் கவிஞரெனக் கூறல் யாங்ஙனம் பொருந்தும்? இது பற்றியே ஒரு கவிக்குரிய கடமையையும் வினையாற்றும் யின்றியமையாமையையும் உளங்கொண்டு, காமத்துப்பால் அமைத்தார். இயற்றின்ர் எனக் கூருது அமைத்தார் என்று சுட்டுவதைச் சற்றுச் சிந்திப்பின் உண்மை புலனுகும். திருவள்ளுவர் காலத்திற்கு முற்பட்ட புலவர்களும் அவர்களுக்குச் சமகாலப் புலவர்களும் கையாண்டுவந்த மரபு, முறை இவற்றை யெல்லாம் உளங்கொண்டே திருவள்ளுவர் இன்பயியல் கூறும் காமத்துப்பால் அமைத்தார்.

திருக்குறள் காமத்துப்பாலில் பெண்களின் மறைவான உறுப்புக்களை வேண்டுமென்றே வர்ணித்தல் போன்ற அநாகரிகச் சொற்களோ, நாணந்தரும் பிற செயல்களோ, அருவருக்குத்தக்க நிகழ்ச்சிகளோ கிடையாது. நாகரீகச் செறிவும், உயரிய பண் பாட்டைக் குறிப்பனவும், உய்ந்துணரும் ஆற்றலை நல்கும் சிறப்பும் நிரம்பிய ஒன்றே திருக்குறள் காமத்துப்பால், இன்பம்பற்றி யியம்பும் பிறநூட்களினும் விழுமியதே காமத்துப்பால்.

எனவே தமிழிலக்கியங்கள் பயில விழைவோர்; இளைஞரும்—முதியோரும் ஏன் பெண்டிருங்கூட காமத்துப்பாலை பயிலலாம். அதில் கறை, குறை, களங்கம் ஏதுமில்லை. கற்பனைத்திறனும் அறிவு வளர்ச்சியும் எண்ணங்களிலும் செயல்களிலும் உயரிய பண்பாடும் பெறத் திருக்குறள் காமத்துப்பாலை கற்கவும் கேட்கவும் முயல்தல் இன்றியமையாததாகும்.

●

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மத்ருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
,, 103-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

5

பேசும் மொழி

முதலில் பேசும் மொழியை எடுத்துக் கொள்வோம். இந்தியத் துணைக் கண்டத்தில் இன்று நடைமுறையில் இருக்கின்ற மொழிகள் நூற்றுக் கணக்காக இருந்தாலும் அவையனைத்தும் இரண்டு பிரிவுக்குள் அடங்கிவிடும்.

அவற்றில், ஒன்று த மி ழ் ப பி ரி வு. இன்னொன்று பிராகிருத (வடமொழி)ப் பிரிவு.

இந்த இரண்டு பிரிவான மொழிகளும் ஒன்றுக்கொன்று சில பல சொற்களைப் பறிமாறிக் கொண்டிருந்தாலும், அவைகளின் சிறப்பியல்பும், தனித் தன்மையும் சிறிது கூட மாற்றம் பெறவில்லை.

எப்படி எனில்; தமிழிலோ, அதன் இன மொழிகளிலோ கலந்துள்ள வட சொற்களை, அந்தந்த மொழிப் புலவர்கள்தான் காண முடியுமே தவிர, ஒரு வடமொழியாளன் காண முடியாது.

அதாவது, அக்தந்த மொழியும், வந்த இதரமொழிச் சொற்களை தன்வயப் படுத்தினவே யன்றி, எந்த மொழியும், இதர மொழிச் சொற்களின் வயப்படவில்லை.

இதனை ஏன் இங்கே சொல்கிறோம் என்றால், சிலர், தமிழில் கலந்துள்ள சில சமஸ்கிருதச் சொற்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு, இந்தி போன்ற வடஇந்திய மொழிகளுக்கும், தமிழுக்கும் வித்தியாசமில்லை—எல்லாம் ஒன்றுதான் என்கிறார்கள். இத்தகையோர் மிகமிகச் சாதாரண ஆட்கள்தான் என்றாலும், குடியாட்சி முறை எல்லோருக்கும் பேச்சுரிமை தருவதால் பொருளற்ற வாதங்களையும் மதித்து பதில் கூறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

தற்கால குடியரசுத் தலைவர், **திரு. இராஜேந்திர பிரசாத்** அவருடைய 'இந்தியா பிரிக்கப்பட்டால்' என்கிற நூலில் மொழிகளைப் பற்றி கூறியிருப்பது இங்கு கவனிக்கத் தக்கது:—

"வட இந்தியாவில் பஞ்சாபின் எல்லையிலிருந்து வங்காளத்தின் எல்லைவரையிலும் தெற்கே மத்திய தென்னாடுகளில், மராத்தி தெலுங்கு மாகாணங்கள் வரையிலும், இடையிட்ட நாட்டில் இந்தி, உருது, அல்லது இந்துஸ்தானி அல்லது வேறு எந்தப் பெயர் கொண்டாவது அழைக்கப்படுகிற 'மொழி' பொதுவாக இருக்கிறது.

இவைகள் தென் மொழிகளான தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளத்தோடு வேறுபட்டிருக்கின்றன,"

என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் வழங்கும் இரண்டு பிரிவு மொழிகளில் எண்ணிச் சொல்லிவிடக்கூடிய அளவில் இருப்பது தமிழ் பிரிவுதான்! கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய நான்கும் தமிழ்ப் பிரிவைச் சேர்ந்தவை.

வடமொழிப் பிரிவைச் சேர்ந்த மொழிகள் கணக்கில் அடங்காதவை. அதிலும் பலவற்றிற்கு வரிவடிவம் கிடையாது. தமிழ்ப் பிரிவில் துளு ஒன்றுதான் வரி வடிவம் இல்லாதது.

தமிழும், அதன் இன மொழிகளான நான்கும் சிற்சில வேறுபாடு கொண்டவையே தவிர, முரண்பட்டவை அல்ல.

அதுபோலவே, வடமொழியும், அதன் இன மொழிகளும், சிறுசிறு வேற்றுமைகளோடு நின்றுவிடும்—மோதிக் கொள்ளாது.

ஆனால், தமிழும் தமிழ்ப் பிரிவும் வடமொழியுடனோ, அதன் இன மொழியுடனோ, ஒத்துப் போகக் கூடியவையல்ல—மோதக் கூடியவை.

மொழி என்பது, சாதாரணமாக ஒருவர்க்கொருவர், எண்ணங்களைப் பரிமாற உதவும் சாதனமாகவே கருதப்படும்.

ஆனால்; ஒருமொழி, அரசாதிக்க மொழியாக வரும்போது, அது கருத்துக்களைப் பரிமாறும் சாதனமாகமட்டுமில்லை—அரசாங்கத்திற்கு ஆணையிட்டு நடாத்தும் முக்கிய கருவியாக அமைகிறது.

எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கிறதோ, அந்த மொழிக்குரியவர்கள் ஆதிக்கக்காரர்களாக இருப்பது இயற்கை.

ஒரு மொழி ஆட்சிமொழியாகும்போது அதன் விளைவும், மதிப்பும் உயர்ந்து விடுகிறது.

இந்த நிலைமையில், பல்வேறு மொழிகளைக் கொண்ட பல்வேறு இராஜ்யங்களைக் கட்டியாளும், ஏகாதிபத்திய ஆட்சிமொழியாக மாறினால், கேட்க வேண்டுமா?

ஆங்கிலேயர்கள் ஆட்சியில், அவர்களுடைய தாய்மொழியான ஆங்கிலத்தை இந்தியாவின் ஏகாதிபத்திய ஆட்சி மொழியாக்கினார்கள்.

வடஇந்தியாவில் முஸ்லீம் ஆட்சிக் காலத்தில், பாரசீகம் அரசியல் மொழியாக நிலவியது.

ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள், அவர்களால் அடிமை படுத்தப்பட்ட நாடுகளில் அவர்களுடைய தாய்மொழியையே ஆதிக்க மொழியாக நுழைப்பது, புதுமை என்றோ—தற்செயலாக நேர்ந்ததென்றோ சொல்ல முடியாது.

அடிமைப்பட்டவர்கள் நிலையான அடிமைகளாகி உழல்வதற்கும், அவர்களுடைய கலாச்சார தேசிய உணர்ச்சிகள் தேய்வதற்கும், ஆதிக்க வெறியர்கள் திட்டமிட்டுச் செய்யும் முதல் சூழ்ச்சி, தங்களுடைய தாய் மொழியை அரியாசனத்தில் ஏற்றுவதுதான்.

ஆங்கிலம் ஆட்சி மொழியானதின் காரணத்தினால், ஆங்கிலத்தின் தரமும், விலையும் உயர்ந்தன. ஆங்கிலம் தெரியாத ஒருவன், எவ்வளவுதான் மேதையாக இருந்தாலும் ஆங்கிலம் படியாதவன் என்ற ஒரே காரணத்திற்காக புறக்கணிக்கப்பட்டான்! ஆங்கிலத்தை எந்த அளவுக்கு பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் எடுத்தாள முடியுமோ அந்த அளவுக்கு எடுத்தாள்வது தான் மேதையின் 'இலக்கணம்' என்கிற எண்ணம் வலுத்தது.

தமிழில் வரும் அரும்பதங்களுக்கு ஆங்கிலத்தால் உரை கூறி விளக்குவதை சமீப காலம் வரை கையாண்டு வந்தனர் சில தமிழ் மேதைகள்!

இவை மட்டுமா? ஆங்கில மொழியிலுள்ள எல்லாக் கலைகளுமே இங்கே திணிக்கப்பட்டன. "ஆதிக்க மொழியில் உள்ள கலைகள் சிறந்தவைகளாகத்தான் இருக்க முடியும்' என்ற குருட்டு நம்பிக்கைபிறந்தது

உதாரணமாக வைத்தியக் கலையைக் குறிப்பிடலாம். தமிழகத்தின் தலைசிறந்த வைத்தியம் சித்த வைத்தியம்—தமிழுக்கே உரித்தானது. த மி ழ க த் தி ல் பிறந்து, தமிழிலேயே வ ள ர் ந் து, தமிழனுடைய உணவுமுறைக்கேற்ப ஆராய்ந்தறிந்த மருந்துகளுடன் மிகப்பெரும் தொன்மையும் வாய்ந்தது, சித்த வைத்தியமாகும். இதுபோலவே வடவர்களின் வைத்தியம் ஆயுர்வேதம்! அவை வளரவேண்டிய இடத்தில், ஆங்கில வைத்தியம்—வளராத வைத்தியம் நமது உணவு முறைகளுக்கு ஒவ்வாத வைத்தியம். ஆடம்பரமாகப் பெரும் செலவோடு நிலைபெற்றது, பசு பழிக்கப்பட்டு எருமை ஏத்தப்பட்டதுபோல!

ஆங்கிலத்தில் சட்டப் புத்தகங்களும், ஆங்கிலத்திலேயே விவகாரங்களும், வழக்குகளும் நடைபெற நேர்ந்ததால், சாதாரண வழக்குகளில்கூட பெரும் செலவு செய்ய நேரிட்டது. வழக்கறிஞர்கள் பகற் கொள்ளைக்காராகளாக மாறினார்கள்! "கோடு எடுத்தான் ஓடு எடுத்தான்" (கோடு - சட்டம், ஓடு - பிச்சைச் சட்டி) என்று பழமொழிகூட உண்டாகி யிருக்கிறதென்றால், சொல்லவா வேண்டும்!

ஆங்கிலத்திலேயே அரசாங்க நடவடிக்கைகள் இருந்தால், ஆங்கிலம் கற்றவனுக்கு மட்டுமே சர்க்கார் அலுவல் கிடைக்கும் என்கிற நிலைமை ஏற்பட்டு சாதாரண தொழிலாளனைவிட சாதாரண சர்க்கார் ஊழியன் பலமடங்கு ஊதியம் பெறுகிறான்!

இதனால் பெரிதும் கல்வித் துறையில் முன்னேறியுள்ள சுயநலக் கூட்டங்கள் நிரந்தரமான ஆதிக்க கூட்டமாக இருக்க விரும்புகின்றன. அந்த விருப்பம் நிறைவேற மானத்தையே 'தியாகம்' செய்துவிட தயாராகின்றன.

அத்தகைய சுயநல ஆதிக்க வர்க்கத்தார் 'உருசி கண்ட பூனை உரியிலே தாவும்' என்பது போல இன்னும் அந்நிய மொழியிலேயே ஆட்சி ஏற்பட வேண்டும் என்று நோன்பிருக்கிறார்கள் — நீதியைக் கழுவேற்றுகிறார்கள்.

தற்போது இந்தியத் துணைக்கண்டத்தில் இந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று வடவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்! இந்தத் துடிப்பிற்கு ஆதிக்கவெறியே காரணம்!

வடஇந்தியாவில், இந்தியை ஆதிக்க

தோழர். ராமசாமிக்கு பாராட்டு

●

உயர். திரு. ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம் நம் திராவிடன் இதழில் தோழர். எம். எஸ். ராமசாமி அவர்களால் எழுதப்பட்டுவரும் நாடு என்றால் என்ன? எனும் கட்டுரையைத் தொடர்ந்து ப டி த் து வருகிறேன். இதைப்படித்து மகிழ்ச்சிக் கடலிலாழ்ந்தேன். கழகத் தோழர்களுக்கு இந்த எழுத்தோவியம் கேடயம் போன்றதாகும். கட்டுரையாளர் தோழர். ராமசாமி அவர்களும் இவ்வித ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு வரும் திராவிடனும் நீடூழி வாழ்க.

அன்பன்,

எம். ஆர். சங்கர், எரணாகுளம்

தூத்துக்குடியில் காமராசர்

பார்ப்பனர்களுக்குக் கோபமாம்?

சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் தூத்துக்குடிக்கு 20-2-55-ல் வருகை தந்தார் தூத்துக்குடியில் உள்ள காங்கிரஸ்காரர்களில் பலர் ஆச்சாரியார் கோஷ்டியைச் சார்ந்தவர்களாதலால் சரிவர வரவேற்புக்கு ஏற்பாடு செய்யாது, ஒரு பொதுக் கூட்டத்திற்கு மட்டுமே ஏற்பாடுசெய்திருந்தார்களாம். இதைப்போலவே செய்தி ஸ்தாபனங்களும் ஆச்சாரியார் வந்த போது கணக்கற்ற புகைப்படங்களும் செய்திகளும் சேகரித்து பத்திரிகைகளில் பிரபல்யப் படுத்தினார்களாம்! ஆனால் காமராசருக்கு அந்த முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லையாம். அது மட்டுமல்லாமல் கனம் காமராசரின் நிகழ்ச்சிகளில் எந்தப் பார்ப்பனர்களும் கலந்து கொள்ளாது கட்டுப்பாடாய் இருந்து விட்டார்களாம்!

ஆனால் நகர மக்கள் அதற்கு நல்ல பாடங்கற்பித்து விட்டார்கள். பொதுவாகச் சொல்ல'போனால் கனம் காமராசர், இவ்வூர் நகர மன்ற வரவேற்பிற்கு பதிலளிக்கும் போது சொன்னார் 'தூத்துக்குடியில் எனக்கு கிடைத்த வரவேற்பில் ஏழை மக்கள் உப்புத் தொழிலாளர்கள் சண்டிபுரத்தில் கொடுத்த வரவேற்பு, என் மனதை விட்டு இன்னும் அகலவில்லை என்றுமே அகலாது' என்றார். அந்த அளவுக்கு உப்புத் தொழிலாளர் சங்கம், வண்டித் தொழிலாளர் சங்கம், ஸ்பின்னிங்மில் தொழிலாளர் சங்கங்களின் சார்பில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. வரவேற்பு கூட்டத்தில் கலந்து கொண்டது லட்சம் மக்களுக்கு மேல் இருக்கும்.

தொழிற் சங்கத் தலைவர் கே. வி. கே சாமி வரவேற்பு உரை நிகழ்த்துகையில் தி. மு. கழகத்தைச் சேர்ந்த நான் காங்கிரஸ் அமைச்சருக்கு வரவேற்பு கொடுக்கிறேன், கழகததின் சார்பில் அல்ல, தொழிலாளர்களின் பிரச்சினையில் எங்கள் கழகம் கட்சிப் பிரச்சினையைக் கலக்காது. யார் நன்மை செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ளும் அந்த அடிப்படையில் தொழிலாளர்களின் பொருட்டு கனம் அமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கிறோம். நாட்டின் அமைச்சர் தந்தைக்குச் சமமானவர் பிரஜைகளாகிய நாம் குழந்தைகளுக்குச் சமமானவர்கள் அதன்படி அமைச்சரைப்போற்றவும் குறைகளை எடுத்துச் சொல்லவும் உரிமையுண்டு.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாங்கள் நமது கனம் காமராசரின் குழந்தைகளாக இல்லை. மத்திய சர்க்கார் அதாவது பெரியப்பா (இன்றைய தினம் அப்படி)சுவீகாரமாய் எடுத்துக்கொண்டார் (உப்பளம் மத்திய சர்க்கார் ஆதிக்கத்திற்குள் இருக்கிறது) எங்களைக் கவனிப்பதில்லை. அக்கரை காட்டுவதில்லை குறிப்பாக அனாதைகளாகவே வாழ்ந்து வருகிறோம் எங்கள் உரிமைப் பிரச்சினைகளைக் கவனிப்பதே கிடையாது.

எனவே எங்களை· கனம் காமராசர் எடுத்து வளர்க்க வேண்டும்· பாதுகாப்பு கொடுக்க வேண்டும் இல்லை மத்திய சர்க்காரையாவது நல்ல முறையில் கவனிக்க தூண்ட வேண்டும். தூண்டியும் கவலைப்படாமல் இருந்தால், தகப்பன் பராமரிப்புக்கு ஆதாவது உங்கள் ஆட்சிக்கு கொண்டு வந்துவிட வேண்டும் என்றார் (இதைக்கேட்டு கனம் காமராசர் சிரித்தார்· மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்) மீண்டும் வண்டித் தொழிலாளர் ஸ்பின்னிங் மில் தொழிலாளர் பிரச்சினைகளை விரிவாக எடுத்துக்கூறி 10 அடி நீளமுள்ள மலர் மாலைகளை அணிவித்தார் கே. வி. கே. சாமி.

இதற்குப் பதில், கனம் காமராசர் கூறுகையில் 'இந்த வரவேற்பைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன், என்னால் இயன்றதை உங்கட்குச் செய்கிறேன், தோழர் சாமி மனதில் தோன்றியதை வெளிப்படையாகப் பேசினார். இவ்விதம் தான் பேசவேண்டும், மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு பிரிதொன்றைப் பேசக் கூடாது. முதலாளிகளின் போக்கை ஒழித்துக் கட்ட வரியின் மூலம் அவர்கள் பணத்தைப் பிடுங்குவோம், அதிலும் மீதப்பட்டால் மரணவரி போட்டு எடுத்துக் கொள்வோம். இதைவிட்டு கம்யூனிஸ்டுகளைப்போல் பலாத்காரம் வேண்டாம். அவர்கள் ஆட்சியும் வேண்டாம். அவர்கள் ஆட்சி சிறை வாழ்வு போன்றது' என்று குறிப்பிட்டார்.

●

கண்டதெலாம் கனவே!

வி கரு. இராமநாதன்

●

பகலவன் பாரை விட்டேகும் நேரம்
புள்ளினம் தம்மிடம் சேரும் காலம்

மாக்களினம் தம்முறவு காணும் வேளை
மங்கையரோ டாண்சேர்ந் தாடும் மாலை

அகண்டவிழி மின்னுமெழில் அழகுமுகம்
அலைமோதும் அவ்வாற்றின் கரை யோரம்

பக்குவமாய் ஆடிவரக் கண்டேன் நானே
பாவையவள் கலகலப்பு வளையல் சப்தம்

காற்றுடச் சேர்ந்தாடும் கருத்த கூந்தல்
கணிசமாய் புடைத்துவிட்ட நகிலின் பிம்பம்

கறவைகுணம் நீலவிழி கோவை யிதழ்
இவையனைத்தும் இழுத்தன அவள் பாலென்னை

இடமறந்தேன் தொழில் மறந்தேன் என்சிந்தை
எல்லாமே மறந்து விட்டேன் அந்நிலையில்

வசியமே தெரியாத இருவர் நாங்கள்
முத்தமிட்டோம் மோனநிலை அடைந்தே விட்டோம்

'இச்'சென்னும் சத்தமே கேட்டு விட்டு
எந்நிலையை நானறிந்து நின்று கொண்டு

கச்சிதமாய்க் கண்விழித்தேன் கண்டதெலாம்
கனவெனவே கவலையுற்றேன் நொந்தே போனேன்.

மொழியாக்க வேண்டும் என்கிற கிளர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டதல்ல! அது நீண்ட நாளைக்கு முன்பிருந்தே வளர்ந்து வருகிறது என்று கூறலாம்.

முஸ்லீம் லீக் பிரமுகர்களில் ஒருவராகிய **திரு எப். கே. கான் துர்ரானி** என்பவர் ஒரு சமயத்தில் கீழ்கண்டவாறு கூறியிருக்கிறார்:

"காசி இந்துத் தலைவர்கள் சிலர், 1867-ல் ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்தனர். எல்லா சர்க்கார் காரியாலயங்களிலும், நீதி மன்றங்களிலும் உருது மொழிக்குப் பதிலாக 'பிரிஜ்' (இந்தி போன்ற ஒரு வடமொழி) மொழியும், அரபி எழுத்துக்களுக்குப் பதிலாக தேவநாகரி எழுத்துக்களும் புகுத்தப்பட வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர்."

இந்தக் கிளர்ச்சியை நடத்திவைக்க வட இந்தியா எங்கும் கமிட்டிகளும், சபைகளும் நிறுவப்பட்டன. இதன் தலைமைக் காரியாலயம் அலகாபாத்தில் ஏற்படுத்தப்பட்டது.

1867-ம் ஆண்டில் வெள்ளை ஏகாதிபத்தியம் இருக்கும்போதே 'பிரிஜ்' மொழியை நுழைக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர் என்றால் இப்போது கூத்தடிப்பதில் ஆச்சர்யமில்லை!

இந்தி அரசாங்க மொழியாக அமுல் நடத்தப்பட்டால், திராவிடர்கள் அரசியல் வாழ்விலிருந்து ஒரு நூறு ஆண்டுகளுக்கு பின்னால் தள்ளப்படுவார்கள்.

அப்படிப் பின்னால் தள்ளப்பட்ட திராவிடர்கள் வடஇந்திய ஆட்சி உள்ளவரை தலைதூக்க முடியாமற் போனாலும் போகலாம். ஒருக்கால் தலை தூக்கினாலும் அந்த நிலைமை தற்போதுள்ள நிலைமையைவிட கீழ்த்தரமானதாகவே இருக்கும்!

ஏனெனில் இந்தி, ஆதிக்க மொழியாகும்போது ஈவிரக்கமற்ற வடஇந்தியா அரசியல் துறைகள் அத்தனையிலும், தானே நிறைந்து அடைத்துக் கொள்ளும். அப்போது திராவிடர்கள் எத்தனை தான் முயன்றாலும் அரசியல் துறையைப் பிடிக்க முடியாமலே இருப்பார்கள்!

ஆங்கில ஏகாதிபத்தியம் ஆங்கிலத்தை நுழைத்த காரணங்கள் பலவற்றில் மிக மலிவான சம்பள குமாஸ்தாக்கள் தயாரிக்க வேண்டும் என்பதும் ஒன்றாகும். ஏனெனில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு உத்தியோகம் செய்யவந்த வெள்ளையன் இங்கிலாந்தின் அரசாங்கச் சம்பளத்திற்கு சமமாகவோ அதிகமாகவோ கேட்பவனாக இருந்தான். காரணம், இந்தியனின் சராசரி வாழ்க்கைச் செலவைவிட வெள்ளையனின் வாழ்க்கைச் செலவு அதிகம் என்பது ஒன்று. இந்தியா ஆங்கிலேயனின் வேட்டைக் காடு என்பது மற்றொன்று.

அவ்வளவு சம்பளம் கொடுத்து உத்தியோக நியமனம் செய்ய இந்திய சர்க்கார் வருமானம் இடந்தராது என்று அரசாங்க நிர்வாக முனையிலிருந்தவர்கள் கருதினார்கள். அதைவிட, இந்தியாவின் கலாசார தேசிய உணர்ச்சிகளை மங்கவைப்பதற்கு ஆங்கிலம் உதவும் என்று கருதினார்கள். எனவே, இந்தியர்களுக்கு ஆங்கிலம் புகட்டி உத்தியோகம் தர முன்வந்தார்கள்.

இத்தகைய நிர்ப்பந்தங்கள் எதுவும் வட இந்திய ஏகாதிபத்தியத்திற்கு இல்லை. எனவே, அரசாங்கத்துறை முழுவதையும் வட இந்தியனைக் கொண்டே நிரப்பலாம். திராவிடன் பங்குக்காக ஏதாவது உத்தியோகம் இருந்தாலும், அதைத் தென்னாட்டுப் பார்ப்பனர் நிரப்பிக் கொள்வார்கள். இதற்கெல்லாம் பேருதவியாக இருப்பதற்குத் தான் இந்திமொழி.

ஆங்கிலேயர் 200 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தும் திராவிடர்களில் நூற்றுக்கு ஒருவர்கூட ஆங்கில அறிவு பெறவில்லை— பெற முடியாது.

எந்த அந்நிய மொழியுமே, பொது மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ விளம்பரம் செய்யப்பட்டதற்காகப் பரவாது நிலைபெறாது. உதாரணமாக தற்கால குடியரசுத் தலைவர், **திரு. இராஜேந்திர பிரசாத்**, அவருடைய 'இந்தியா பிரிக்கப்பட்டால்' என்னும் நூலில் மொழி என்ற தலைப்பில் கூறியதை இங்கு கூறலாம். வருமாறு :

"முஸ்லீம் ஆட்சி காலத்தில் பாரசீகம் அரசியல் மொழியாயிற்று. இந்துக்களால், அதுவும் குறிப்பாக அரசாங்கத்தாரோடு பெரிதும் தொடர்புடையவர்களால் அது பழக்கப்பட்டு வந்தது. ஆனால். அது பொதுமக்களின் மொழியாக முடியவில்லை—ஆகவும் முடியாது,"

இப்படிக் கூறியதோடு பாரசீக மொழி ஏன் பரவ முடியவில்லை, என்பதற்கும் குறிப்புரை கூறி இருக்கிறார். அது வருமாறு:-

"இந்திய முஸ்லீம்கள் பெரும்பாலோர் பூர்வீக இந்துக்கள்! அவர்களுடைய மொழிகளும் இந்திய மொழிகளே! எனவே; பாரசீகம் அவர்களிடையில் பரவ முடியவில்லை.

—தொடரும்

முதல் பக்கத்—தொடர்ச்சி

—மதுரை மீனுட்சி அம்மனுக்கு வைர மூக்குத்தி— ஆறுகால பூசை—ஆடம்பர உற்சவம் இவைகளோடு தருமபுர—திருவாவடுதுரை — திருப்பனந்தாள் போன்ற மடங்களுக்கு பல கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள சொத்துக்களுக்குக் குறைவேயில்லை. மதத்திற்காகவும் ஆண்டவனுக்காகவும் என்று செலவிடப்படும் லட்சக் கணக்கான ரூபாய்கள் நடமாடும் தெய்வங்களான ஏழைகளை வாழ்விக்க, சிறுவர்களுக்கு அறிவுதர, பிணியாளர்களுக்கு மருந்துதர பயன்படுத்தினுல் நல்லதல்லவா?

* இவைகளிலிருந்து பாட்டாளிக்கு தரப்படுகிற ஒரு முழத் துண்டு பகவான் தனக்குப் போர்த்தப்படும் பொன்னுடையாக ஏற்றுக்கொள்ளமாட்டாரா?

* இவைகளிலிருந்து ஏழைக்குத் தரப்படுகிற ஒரு கவளச் சோறு, ஈசன் சன்னதியில் படைக்கப்படும் பெரிய ஆராதனையைவிட மேலல்லவா?

* இவைகளிலிருந்து ஏழையின் வயிறு குளிர்ந்தால் ஆண்டவன் அகம் மகிழாதா?

* இவைகளிலிருந்து ஏழைகளின் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தால் அதுவே ஆண்டவனுக்கு 'செலுத்தக் கூடிய காணிக்கையல்லவா?

3. பினுங்கு ராமகிருஷ்ண ஆசிரமத்தில் நடந்த கூட்டத்தில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் தமிழர் நெறி தமிழ் நாட்டில் ஒருபோதும் பல கடவுள் வணக்கம் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை என்று பேசியுள்ளீர்கள்!

இது உண்மையானுல் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானும் அவருடைய குடும்பத்தினர்களாகிய பார்வதி, விநாயகர், சுப்ரமண்யர் வள்ளி. தெய்வயானை முதலிய கடவுள்களை மறுக்கிறீர்களா? சைவசமயத்தை சார்ந்த சிவன் கோயில்களில் பல தெய்வங்கள் இருக்கக் காரணம் என்ன?

4. கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் ஆண்டவன் உங்களிடையே இருக்கிறுன் கைலாயத்திலோ — வைகுண்டத்திலோ அல்ல என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதன்படி தாங்கள் கைலாயம் வைகுண்டம் என்று எதுவும் இல்லை என்று நம்புகிறீர்களா? நம்மிடத்தேஉள்ளகடவுள்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கோவில்கள் கட்டுவானேன்? பல வட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து உற்சவங்கள் ஆராதனைகள் செய்வானேன்,

5 அதே கூட்டத்தில் தீயபழக்கங்களை ஒழிப்பதற்கு முதல் கவனம் செலுத்திவிட்டு பிறகு கடவுளைப்பற்றி பேசுவதுதான் முறை என்று பேசியுள்ளீர்கள்.

சமூகத்தில் ஏற்பட்டுள்ள உயர்வு—தாழ்வு, ஏழை—பணக்காரன், பிறப்பால் உயர்ந்த ஜாதி—தாழ்ந்த ஜாதி ஆண்டான்—அடிமை, மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால், மோட்ச நரகத்தின் பெயரால் மக்களிடையே ஏற்பட்டுள்ள தீயபழக்கவழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் சடங்குகளையும் ஒழிப்பதற்குபாடுபட்டுவரும் சீர்திருத்த நோக்கங்கொண்ட கழகங்களை நீங்கள் வெறுப்பது ஏன்?

6 அதே கூட்டத்தில் பொருளையும் ஆற்றலையும் விளக்கவே சிவசக்தி வழிபாட்டுமுறை விளக்கப்பட்டிருக்கிறது என்று கூறியுள்ளீர்கள். அப்படியானுல் லிங்க உருவ வழிபாட்டின் பொருள் என்ன? சிவபெருமான் ரிஷி பத்தினியுடன் கள்ள நட்பு கொண்டிருந்தபோது ரிஷி கண்டுகொண்டு சிவபெருமானுடைய ஆண்குறி துண்டித்து விழக்கடவது என்று சாபமிட்டதால் சிவபெருமானின் ஆண்குறி துண்டித்து விழ. துண்டித்து விழுந்த ஆண் குறியை பெண்குறியிற் பொருத்தி ஆண்குறிக்கு சிவம் என்றும் பெண்குறிக்கு சக்தியென்றும் பெயரிட்டதாக கூறப்படும் புராணக் கதையை நம்புகிறீர்களா?

7. ஒருவன் அன்பு, அறம். அருள், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், நீதி, நேர்மை ஆகியவற்றை உடையவராக இருக்க நீங்கள் போற்றும் திருக்கோயில் வழிபாடு அவசியம்தானு? திருநீற்றுப் பூச்சு அவசியம்தானு? காவி உடை அவசியம் தானு! சிவன் அவர் மனைவி பார்வதி, அவர்கள் பிள்ளைகள் விநாயகர், சுப்பிரமணியர். அவரின் மனைவி வள்ளி தெய்வயானை, விஷ்ணு, பிர்மா போன்ற கடவுள்களை வணங்க வேண்டியது அவசியம்தானு? அதைப்பற்றிய ஆபாசமான அருவருக்கத்தக்க புராணங்களைப்பற்றிய உங்களின் உண்மைக் கருத்து என்ன?

8. நீங்கள் கூறுவதுபோல் திருந்திய சிந்தையின் உலக நலங்கருதி உருவெடுக்கும் உயர்வான கொள்கைகளே சமயம் எனப்படுவது என்றுல் சைவம்—வைணவம்—புத்தம்—சமணம் — இஸ்லாம்—கிருஸ்துவம்—பார்சி—சீக்கியம் போன்ற இவைகளில் எது திருந்திய சிந்தையில், உலக நலங்கருதி உருவெடுத்து, உயர்வான கொள்கைகளையுடைய சமயம்? இவைகளில் ஏதேனும் ஒன்ரு அல்லது எல்லாமுமா? எல்லாமென்றுல். ஒன்றுக்கொன்று கொள்கைகள் முரன்படக் காரணம் என்ன? தனித்தனி மதப்பிரசாரங்கள் ஏன்?

9. உலகத்திற்கெல்லாம் நாகரீகத்தைக் கற்றுக் கொடுத்த நாடு, பொன் விளையும் நாடு ஜீவன் முக்தர்கள், ஆச்சாரியார்கள் வாழ்ந்த நாடு, அன்பு அறம் ஆகியவற்றின் வழியே வாழ்ந்து காட்டிய நாடு என்று போற்றப்படுகின்ற தமிழ் நாட்டிலிருந்து பல வட்சக் கணக்கான தமிழர்கள் தோட்டக் கூலிகளாக வேறு நாடுகளுக்கு வரக் காரணம் என்ன!

10. முதலையுண்ட பாலனை சுந்தர மூர்த்தி நாயனுர் மீட்டார் என்பது உண்மையா? உண்மை யென்றுல் இரண்டு வருஷங்களுக்கு முன்பு முதலை உண்ட பாலன் எப்படி உயிருடன் வர இயலும்?

11. சைவ சமயத்தைப் பற்றியோ. சிவபெருமானைப் பற்றியோ உலகத்தில் உள்ள நன்மை தீமைகளைப்பற்றியோ ஒன்றும் தெரியாத—தெரிந்து கொள்ள முடியாத பால பருவத்தையுடைய திருஞான சம்பந்தருக்குப் பார்வதி பால் ஊட்டக் காரணம் என்ன?

உலகத்தில் எத்தனையோ லட்சக் கணக்கான பிள்ளைகள், பால் இன்றி வாடி, உயிர்விடும்போது திருஞான சம்பந்தருக்கு மட்டும் பார்வதி பச்சாதாபப்பட்டு பால் ஊட்டியதற்குக் காரணம் என்ன?

12. சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் அஹிம்சையை உயிராக உடையவர்கள் மற்றவர்களுக்கு மனத்தால் கூட தீங்கு நினைக்காதவர்கள் என்று சொல்லப்படும்போது மதவேறுபாட்டின் காரணமாக மதுரையில் சைவர்கள், புத்த விக்ரகத்தைக் கொளுத்தியும் 8000 சமணர்களைக் கழுவில் ஏற்றியும் வெறியாட்டமாடியது முறையா? இந்த சம்பவத்தின் நினைவாக சைவர்கள் உற்சவம் கொண்டாடுவது இழிந்த செயல் அல்லவா?

13. சைவ சமயத்தைப்பற்றி எழுதப் பட்டுள்ள புராணங்களின்படி:—

தன் இரண்டு கண்களையும் குத்தி பிடுங்கிக் கொண்ட பின்புதான் பரம சிவன் கண்ணப்பருக்கு மோட்சம் கொடுத்தார்.

தான்பெற்ற குழந்தையின் கழுத்தை அறுத்து, பிள்ளைக் கறிசமைத்து பரம சிவனுக்குப் போட்ட பின்தான் பரம சிவன் சிறுத்தொண்ட நாயனுருக்கு மோட்சம் கொடுத்தார்,

அக்கினியிலே மூழ்கி தன்னை அழித்துக் கொண்ட பின்னர்தான் நந்தனுருக்கு மோட்சம் கொடுத்தார்.

உடலிலே உள்ள சதைகளை கழித்து விட்டு, ரத்தத்தை வடித்துவிட்டு வெறும் எலும்பு உருவாக மாறியபின்புதான் காரைக்கால் அம்மையாருக்கு சிவபெருமான் மோட்சம் கொடுத்தார்.

தமிழனுக்கு மானம் பெரிது அந்த மானத்தை அடகு வைத்து, தன் அருமை மனைவியை பரமசிவனேடு பள்ளி அறைக்கு அனுப்பிய பிறகுதான் இயற்பகை நாயனுருக்கு பரமசிவன் மோட்சம் கொடுத்தார்.

சிவனுக்காக சேமித்து வைத்திருந்த நெல்லை பஞ்ச காலத்தில் அந்த நெல்லை தின்ற குற்றத்திற்காக தன் தாய்—தந்தை — மனைவி எல்லோரையும் கொன்ற பிறகுதான் சிவபெருமான் கோட்புலி நாயனுருக்கு மோட்சம் கொடுத்தார்.

மேல்கண்ட சைவ சமயாச்சார்ரிகள், நாயன்மார்கள், சைவ மதம் வளரவும், வாழவும் பாடுபட்டவர்கள் தங்களுக்கு மோட்சம் கிடைக்க கையாண்ட கொடிய வகைகெட்ட, முறைகெட்ட செயல்களை எண்ணிப் பார்க்கும் ஒருவர் சைவ மதத்தில் அஹிம்சை இருக்கிறது. அறிவு இருக்கிறது என்று நம்ப முடியுமா?

அப்படியே நம்பி தாங்களும் மோட்சம் அடைய சைவ மதத்தின் பாதுகாவலர்களாக விளங்கிய நாயன்மார்கள் செய்த காரியங்களை, செய்கைகளைத் தாங்களும் செய்ய ஆரம்பித்தால் உலகத்தில் அறம் வளருமா?

14. இந்துக்கள் என்றுல் யார்? இந்துக்கள் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

தமிழர் சமுதாயத்தில் ஆரியர்களால் உண்டாக்கப்பட்டுவிட்ட இழிவுகளையும் ஜாதி கொடுமைகளையும் மதத்தின் பெயரால், ஆண்டவன் பெயரால் மக்களை மாக்களாக ஆக்கிவரும் கொடுமைகளை எடுத்துச் சொல்லி மக்களை நல்ல வழியில் நடத்திச் செல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டு அந்த நல்ல எண்ணத்திற்காக தங்களால் இயன்ற அளவுக்கு பாடுபட்டு வருகிற சீர்திருத்தவாதிகளை தாங்கள் வெறுப்பதற்கு—திட்டுவதற்கு காரணம்? உங்கள் கொள்கைப்படி நாங்கள் குற்றம் என்ன செய்தோம் குன்றக்குடி அடிகளே குற்றமென்ன செய்தோம்? கூறுவீர்களா? நீங்கள் கூறத்தான் வேண்டும். நீங்கள் எங்கள் கேள்விகளுக்குச் சொல்லும் பதிலுக்கு நாங்கள் எங்களுடைய நேர்மையான பதிலை மக்களுக்குச் சொல்ல சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அதுதான் முறை! அதுதான் வழி! செய்வீர்களா?

சிங்கப்பூர் தி. மு. கழகம்
21-2-55

சேலம் மாவட்டத்தில் அறிஞர் அண்ணு

●

சுற்றுப்பயண ஏற்பாடுகள்

ஏப்ரல் இரண்டாவது வாரத்தில், சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய அண்ணு அவர்கள் ஒப்புதல் அளித்து விட்டார்கள். எனவே கூட்டம் நடத்த விரும்பும் கிளைக் கழக நிர்வாகிகள் உடனே மாவட்டக் கழகத்திற்கு எழுதி விவரம் அறிய வேண்டுகிறோம்.

அன்பன்
ப. ராமலிங்கம்
துணைச் செயலாளர் சேலம் மாவட்டம்

ராஜேஸ்வரி அம்மையார்

மேரி ராணிக் கல்லூரி பேராசிரியையும், தமிழ்ப்பெரியார் திரு. வி. கல்யாண சுந்தரனுர் அவர்களின் மாணவியும், விஞ்ஞான நூல்களை தூய—எளிய தமிழில் வெளியிட்டவரும், சிறந்த பேச்சாளருமான தோழியர் இ டி. ராஜேஸ்வரி அம்மையார் 1—3—55-ம் நாள் இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துவதுடன், அவ்வம்மையாரின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை

கொள்ளுப் பெட்டி தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் 12-2-55 இரவு 9 மணிக்கு தோழர் வை. மு. அழகேசன் தலைமையில் கழக பணிமனையில் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வருகிற ஏப்ரல் மாதம் நடக்கவிருக்கும் கழக ஆண்டு விழாவில் ஓர் சொற்போர் நடத்துதல். இதில் வெற்றி பெறும் தோழர்களுக்கு பரிசு வழங்குதல். தலைப்பு: "இயற்கையும் நாமும்".

ஆண்டுவிழாவில் தோழர் எம். ஆர். ராதா அவர்களின் வால்மீகி ராமாயணத்தை நடித்துக் காண்பிப்பது.

இலங்கை தி. மு. க. கிளைக் கழகங்களின் ஆதரவு பெருத எந்த ஸ்தாபனங்களுக்கும் மத்திய கழகம் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறது.

மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேறியபின் நாடகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

பம்பாய்

தாராவித் தாழ்த்தப்பட்டோர் சம்மேளன செயற் குழு கூட்டம் 2[illegible]-2-55 மாலை 6-30 மணிக்கு திரு வி. எம். டி. ராஜா அவர்கள் தலைமையில் அவிப் பிள்ளைவாடியில் நடைபெற்றது.

சம்மேளனத்திற்கு அதிகமான புதிய உறுப்பினர்கள்சேர்க்கல் முந்திய உறுப்பினர்களிடம் துரிதமாக சந்தா வசூல் செய்தல் போன்ற முக்கிய காரியங்களை பரிசீலனை செய்து நல்லதொரு முடிவு செய்தது. சம்மேளன நிர்வாக உறுப்பினரான திரு பி. எஸ். ஆனந்தராஜ அவர்களின் பெண்மகவு 17—2—55-ல் இயற்கை எய்தியமைக்கு அனுதாபத் தீர்மானம் ஒன்றும் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருப்பத்தூர் (வ. ஆ.)

பேருரில் கூடிய பொதுக் குழுவில் நிறை வேற்றிய தீர்மானத்திற்கிணங்க தி. மு. கழகத்தோழர்களால் 24-2-55 வியாழன் இரவு 9-30 மணிக்கு எம். எம். ரத்தினம் சலவை நிலையத்தில் ஆலோசனை குழு கூடியது. அதுபோது அழகிரி முன்னணி நாடக மன்றம் என குழுவிற்கு பெயர் வைத்து அறிஞர் அண்ணு தீட்டிய 'காதல் ஜோதி' நாடகம் நடத்த முடிவு செய்யப்பட்டது. மன்றத்திற்கு செயலாளராக எம். அருணகிரி, பொருளாளர் டி. எஸ். கிருட்டிணன், அமைப்பாளர் (டைரக்டர்) சி. எம். எஸ் பாலு, உதவி ஈ. மன்னர் அவர்களையும் ஆர். பி. சாரதி. பி. ஏ. கோவிந்தன் எ. கண்ணன் மற்றும் பல நடிகர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது செயலாளர் முடிவுரைக்குபின் ஆர். பி. சாரதி நன்றி கூறலுடன் இனிது முடிவுற்றது.

மாயூரம்

நகர தி. மு. கழக செயற்குழு கூட்டம் 27—2—55 மாலை 6 மணிக்கு செயலாளர் என். கிட்டப்பா தலைமையில் பொருளாளர் தோழர் வி. சங்கையர் தையல் நிலையத்தில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

தோழர் கண்ணதாசன் அவர்களின் தந்தையார் திரு சாத்தப்பன்அவர்களின் மறைவுக்கும் மாப்படுக்கை தி. மு. க. பொருளாளர் தோழர் கண்ணன் அவர்களின் தந்தையாரின் மறைவுக்கும் அனுதாபம தெரிவிக்கிறது.

20—3—55 ஞாயிறு அன்று மாயூரத்தில் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக் கூட்டத்தை நடத்துவது.

பொதுக்குழு முடிவுக் கிணங்க மாயூரம் நகரத்திலுள்ள பலதரப்பட்ட தொழிலாளரடையேயும் தொடர்பு கொண்டு தலைமைக் கழக ஆணையின் பேரில் தொழிற் சங்கம் நிறுவ ஐவர் கொண்டுள்ள ஒரு குழுவை நியமிக்கிறது.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிடப்பித்தன்

7—1—55 தொடர்ச்சி

4

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம் என்ற தலைப்பின் கீழ் எழுதப்படும் இக்கட்டுரை ஆரம்பக் கல்வி சீர்திருத்தத்தைப்பற்றி எழுதப்படாது பொதுவான வகையில் கல்வி முறையைப்பற்றி எழுதப்பட்டு வருவது வாசகர்கள் அறிந்ததே. ஆரம்பக்கல்வி சீர்திருத்தம் பற்றி எழுதுவதற்கு அப்பொருளைப் பற்றி கூறும் நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து பார்க்க நேரிட்டது. இப்படி ஆராய்ந்து பார்த்ததின் பயனாய் நம் திராவிட நாட்டின் கல்வி சரித்திரத்தையே எழுத வேண்டிய பெரும் வேலை ஏற்பட்டுவிட்டது. இந்திய கல்வி சரித்திரத்தை எழுதியுள்ளவர்கள் அத்தனைபேரும் திராவிட நாட்டு கல்வி சரித்திரத்தைப்பற்றி தம் நூல்களில் மாதிரிகுக் கூட ஒரு வார்த்தையும் எழுதவில்லை. அவர்கள் கூறியிருப்பதெல்லாம், புகழ்ந்து எழுதியிருப்பதெல்லாம் சமஸ்கிருத கல்வியைப் பற்றியும் பார்ப்பனர்களின் கல்வி சரித்திரத்தைப் பற்றியுமே இருக்கின்றன. அவர்கள் ஆராய்ந்து ஆராய்ந்து பார்த்துள்ள நூல்களெல்லாம் சமஸ்கிருத நூல்களாகவே உள்ளன. அவர்கள் கூறும் பண்டைக்கால இந்திய கல்வி சரித்திர மெல்லாம் சமஸ்கிருத கல்வி சரித்திரமாகவே யுள்ளது. ஆகவே இவர்களால் எழுதப்படாத எழுத விரும்பப்படாத திராவிடநாட்டு கல்வி வரலாற்றை—அவ்வரலாறு புகழத் தக்கதொன்றாக இருப்பினும் அல்லது இகழத்தக்கதாக இருப்பினுங் கூட—எழுதிவிட வேண்டும் என்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. நம் நாட்டு கல்வி நிலையை பண்டைக் கால முதல் செட்டனிட்டு வந்து தற்கால கல்வியைப் பற்றி முடிவில் எழுதலாம் என்ற எண்ணத்துடன் தான் இக்கட்டுரையை பொதுவரலாறாக எழுதி வரப்படுகின்றது. நம்நாட்டு கல்வி முறையைப் பற்றி நமக்கு கிடைத்துள்ள இலக்கிய இலக்கணங்களின் துணைக்கொண்டு கூறப்பட்டுள்ளது. இவைகளை வாசகர்கள் வரவேற்பார்களென்றே நம்புகின்றோம்.

பண்டைக்காலத்தில் கல்வி நிலையானது சிறப்புற்றிருந்தது என்பதற்கு தொல்காப்பியமும் சங்க நூல்களும் சான்றாகக் கூறப்படுகின்றன. சொல்லிலக்கணம் எழுத்திலக்கணம் என்றவையோடமையாது பொருளிலக்கணமும் கண்ட பண்டைக்கால திராவிட மக்களின் கல்வி மேம்பாட்டுத் திறனைக் கண்டு யாவரும் வியப்படைகின்றனர். புகழ்ந்து புகழ்ந்து பேசவும் செய்கின்றனர். தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்ட காலத்திலும் புகழ்பெற்ற புலவர்களும் ஆசிரியர்களும் இருந்துவந்தனர், அவர்களால் இயற்றப்பட்ட நூல்களும் இலக்கிய இலக்கணங்களும் நன்னிலையில் வளர்ந்து பரந்து சிறந்திருந்தன என்ற உண்மைகளை தொல்காப்பிய சூத்திரங்களே நவில்கின்றன எனக் கூறுவர் தமிழறிஞர்கள்.

"மொழிபவியல் புணர்ந்தோரே"
"என்மனார் புலவர்"
"என்ப"
"எனமொழிப"
"என்ப குறியறிந்தோரே"
"மொழிப் புலனன் குணர்ந்த புலமையோரே"
"மொழிப தொன்னெறிப் புலவர்"
"மொழிப யாப்பறி புலவர்"
"செவ்விதென்ப சிறந்திசினோரே"
"நேரிதி னுணர்ந்தோர் நெறிப் படுத்தினரே"
"வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே"
"நுனித்தகு புலவர் கூறிய நூலே"
"பாட லுட் பயின்றவை நாடுங்காலை"

என்றெல்லாம் தொல்காப்பிய சூத்திரங்களின் கண்ணே தொல்காப்பியரால் ஆளப்பட்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும் தொல்காப்பியர் கூறும் இலக்கணமெல்லாம் அவருக்கு முந்தியகால இலக்கியங்களைக் கொண்டும் கூறியனவே எனக்கூறுவர். தொல்காப்பியர் காலத்திற்கும் முந்திய காலத்திலும் கல்விநிலை சிறப்புற்றிருந்தது என உய்த்துணர்தற்கு இப்படியெல்லாம் எடுத்துக் காட்டப்படும் தமிழறிஞர்களால்.

தொல்காப்பியர் ஒரு மாணக்கராயிருந்து பாடங்கேட்டுப் புலமை எய்தி ஆசிரியர் ஆனவர் என்பதையும், நூலியற்றிய நூலாசிரியரும் மாணாக்கர்கட்கு கல்வி அறிவு புகட்டிய தலையாய கல்வி ஆசிரியருமாக இருந்தவர் என்பதையும் 'மன்னிற சிறப்பின் வானோர் வேண்டத்' தென்மலை யிருந்த சீர்சான் மூனிவரன், றன்பாற் றண்டமிழ் தாமின் றுணர்ந்து, துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன் முதற் பன்னிரு புலவருங் பாங்குறப் பகர்ந்த' என வரும் **புறப் பொருள் வெண்பா மாலைப்** பாயிரத் தாலும், 'அகத்தியர் வழித தோன்றிய ஆசிரிய ரெல்லாருள்ளுந் தொல்காப்பியனாரே தலைவரென்பது எல்லா ஆசிரியருங் கூறுப வென்ப" என 'வினையின் நீங்கி' எனும் மரபியல் சூத்திரவுரையிற் பேராசிரியர் கூறியதனாலும் உணரும்படிக் கூறுவர். தொல்காப்பியனார் "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி—புலந்தொடுத்த (இலக்கண நூலியற்றி) அதனை நிலந்தரு திருவிற்பாண்டியனது அவைக் களத்தே அதங்கோட்டாசான் என்ற நல்லிசைப் புலவர் கேட்ப அரங்கேற்றினார் எனும் வழக்காறை அவரது ஒருசாலை மாணாக்கரான பனம்பாரனார் கூறியதனாலும் பாயிரம் கூறுவதையும் காணச் சொல்லுவர்.

தொல்காப்பியமானது எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என மூன்று பெரும் பகுதிகளுடையது. எழுத்து, சொல், பொருள் ஆகியவைகளின் இலக்கணங்களை விரித்துக் கூறுவது. எழுத்தும் சொல்லும் ஆராய்ந்த மாணவன் பொருளையும் கற்றுத் தேர்வது அக்கால கல்வித்துறை சட்டமாக இருந்து வந்தது. எழுத்தும் சொல்லும் மட்டுமே ஆராய்ந்து பொருளிலக்கணப் பயிற்சிப் பெறாராயின் கல்விப் பயிற்சியானது முற்றுப்பெறாதென்பது அக்காலத்தின் இலக்கணமாயிருந்தது. "எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறமே எனின் இவை பெற்றும் பெற்றிலேம்" என்று இறையனார் அகப்பொருள் களவியலுரைக் கூறுவதால் இவ்வுண்மை தெரியவரும் என எடுத்துக்காட்டுவர்.

சொல்லதிகாரம் எழுத்ததிகாரம் பொருளதிகாரம் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒன்பது இயல்கள் உடையனவாக வகுக்கப்பட்டுள்ள பெற்றியே அக்கால கல்விச் சிறப்பினையும் மாண்பினையும் எடுத்துக் கூறப் போதுவனவாகும். இவ்வாறெல்லாம் வகை துறை படுத்திக் கூறப்படும் சூத்திரப்பாக்கள் தொல்காப்பியரால் மூதன் முதல் இயற்றப்பட்டு சட்டதிட்டங்களாக செய்யப்பட்டனவன்று. தமிழ் கூறு நல்லுலகத்து மக்கள் தொன்றுதொட்டு உலகியல்புகளில் வழங்கிவந்த அகப்புற நிலைகள் யாவற்றையும் புலவர்கள் சிறப்பித்துப் பாடியும், இலக்கிய வரையறைகள் வகுத்தும் செய்யுள் வழக்கில் உருப்படுத்தினர் என்பதே உண்மையாகும்,

'உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு [புணர்தலின்
வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே"

எனவும்,

"நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

எனவும்'

தொல்காப்பியரே கூறிப் போவதால் இவ்வுண்மை தெரியவருவது காண்க என விளக்கிக் கூறுவர்.

இப்படி தமிழறிஞர்களால் புகழ்ந்து கூறப்படும் தொல்காப்பியத்துள் அக்காலத்திய கல்வி நிலையைப் பற்றி கூறப்படும் உண்மைகளை ஒருவாறு ஆராய்ந்து காணுவோம்.

தலைவன், இல்லறம் நடத்தும் காலத்தில் பல காரியங்களின் பொருட்டு தலைவியைப் பிரிந்து செல்லும் பிரிவுகள் பல உண்டு. ஓதல், பகை, தூது, போர், பொருளீட்டல் முதலியவை காரணங்களாக நிற்ப இப் பிரிவுகள் நிகழ்தல் உண்டு. களவு கற்புக் காலங்களில் நிகழ்தற்குரிய பொது வொழுக்கமாகக் கூறப்படும் பாலை ஒழுக்கமான இப் பிரிவு ஒழுக்கத்தைப்பற்றிக் கூறும் தொல்காப்பிய சூத்திரங்களில் அக்காலத்திய கல்வி பற்றியும் கூறப்பட்டுள்ளது.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (சூத்—25)

அவற்றுள்

ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன (சூத்—26)
தானே சேறலுந் தன்னொடு சிவணிய
வேனோர் சேறலும் வேந்தன் மேற்றே (சூத்—27)
மேவிய சிறப்பி னேனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியு
மிழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவே (சூத்—28)
மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே (சூத்—29)
மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப (சூத்—30)
உயர்ந்தோர்க் குரிய வோத்தினான (சூத்—31)
வேந்து வினையியற்கை வேந்தனி னொரீஇய
வேனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே (சூத்—32)
பொருள்வயிற் பிரித லுமவர்வயி னுரித்தே
யுயர்ந்தோர் பொருள்வயி னொழுக்கத் தானே (சூத்—33)
முந்நீர் வழக்க மகடூஉ வோடில்லை (சூத்—34)

என்றெல்லாம் பொருளதிகாரம் அகத்திணை யியலில் கூறப்பட்டுள்ளதினின்றும் தொல்காப்பியர் காலத்திய கல்வி நிலையைப்பற்றி ஒரு சிறிது அறியப்படுதற்கு ஏது உளது.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"

என்னும் சூத்திரத்துள் ஓதற்பிரிதலும் பகைமேற் பிரிதலும் தூதுற்றுப் பிரிதலும் என மூன்றுவகையான பிரிவுகள் கூறப்பட்டுள்ளதினின்றும் கல்வி கற்பதின் பொருட்டுப் பிரிந்தேகுதல் எனும் வழக்கம் அப்பண்டைக் காலத்தில் நிலவியிருந்ததென்னும் உண்மை தெரியவரும் இளம் வயதில் மட்டுமல்ல மணமான பின்னருங்கூட கல்வி பயிலும் வழக்கம் இருந்து வந்தது என்பதும் இச்சூத்திரத்தால் தெரியவரும். திருவள்ளுவர் தம் திருக்குறளில்

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (குறள்)

என்று கூறியுள்ள பொருளையும் ஒப்பு நோக்குக.

மேற்கூறிய சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறும் பொருள் அறிந்து போற்றத்தக்கதாகும், **"ஓதற்குப் பிரிதலாவது தமது நாட்டகத்து வழங்காது பிறநாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே, அவற்றினைக் கற்றல் வேண்டிப் பிரிதல்"** என அவர் விளக்கிக் கூறியுள்ளது மற்றைய உரையாசிரியர் யாரும் கூறாத ஒன்றாகும். இளம்பூரணர் தரும் இவ்விளக்கமானது நமது சிந்தனையை ஈர்ப்பதாக உள்ளது. தம்மொழி மட்டுமின்றி பிறநாட்டு மொழிகளும் பயின்று சிறந்த அயல்நாட்டு மொழிப் புலவர்களாகவும் விளங்குவதற்கான அவா அக்கால மக்களிடையே நிலவி வந்த உண்மையையும், அவ்வண்ணமே அக்காலத்திய மக்கள் பிறநாட்டுக்குச் சென்று—அதாவது கடற்செலவு நாடுகட்கும் தரை செலவு நாடுகட்கும் சென்று—மொழி, கலை, இலக்கியங்களைப் பயின்று பன்மொழிப் புலவர்களாகத் திகழ்ந்தனர் என்ற வரலாற்றையும் எடுத்துக் கூறும் இளம்பூரணர் உரை புகழத்தக்கதாகும்.

தொல்காப்பியர் காலத்துக் கல்விச் சிறப்பை இப்படி தெரிந்து கொள்ளும் நாம் தொல்காப்பியர் கூறும் அடுத்த சூத்திரத்தைப் படித்ததும் திகைப்படையப் பெறுகின்றோம்.

"அவற்றுள்
ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன"

என்ற சூத்திரமானது கல்வி கற்பதை—அதாவது கல்வி கற்கும் உரிமையை—உயர்ந்த வகுப்பினருக்கே உரிமையுடையதாகக் கூறுகின்றது. இச்சூத்திரத்துள் கூறப்பட்டுள்ள உயர்ந்தோர் என்பார் யார் என விளக்கிக் கூறப்படவில்லையாயினும், கல்வியானது உயர்ந்தோர்க்கே உரியதொன்றும் மற்றோரான கீழோர்க்கு உரியதன்றெனவும் கூறும்போது தொல்காப்பியர் காலத்தில் பிறப்பினால் ஏற்றத்தாழ்வுடைய கல்வி நிலைத்திருந்தது எனக்கொள்ளுதற்கு இடமுள்ளது. இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையைப் படித்துப் பார்க்கும் போது தொல்காப்பியர் காலத்தில் **அந்தணர், அரசர், வைசியர் எனும் உயர்ந்தோர் மட்டுமே கல்வி உரிமையை தமது தனி உரிமையாகக் கொண்டிருந்தனர் எனவும் கொள்ள வேண்டியுள்ளது.** நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கு "ஓதற் பிரிவுந் தூதிற் பிரிவும் அந்தணர் முதலிய மூவரிடத்தன என்றவாறு" என்று உரை எழுதியுள்ளார். **"உயர்ந்தோர் எனக் கூறலின் வேளாளரை ஒழித்தாரென்றுணர்க"** என்று விளக்கமும் கொடுத்து அந்தணர் அரசர் வணிகர் எனப்பட்டோருக்கு மட்டுமே ஓதற்பிரிவு கூறப்பட்டதென நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க,

இத்துடன் நின்றுவிடவில்லை இவ்வுரையாசிரியர்

"காமஞ் சான்ற கடைக் கோட்காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி

யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"

(தொல்—பொருள்—கற்பியல்)

என்ற சூத்திரத்தைக் குறிப்பிட்டு நச்சினார்க்கினியர் மேலும் கூறுவதாவது:—"சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" என்பதனாற் கிழவனுங் கிழத்தியும் இல்லறத்திற் சிறந்தது பயிற்றுக்கால் இறந்ததனாற் பயனின்றாதலின் இல்லறம் நிரம்பா தென்றற்கு நிரம்பா வாழ்க்கை யென்றார். இல்லறம் நிகழ்கின்ற காலத்தே மேல வருந் துறவறம் நிகழ்த்துதற்காக அவற்றைக் கூறும் நூல்களையுங் கற்று அவற்றின் பின்னர்த் தத்துவங்களை யுணர்ந்து மெய்யுணர்தல் அந்தணர் முதலிய மூவர்க்கும் வேண்டுதலின் ஓவற்பிரிவு அந்தணர் முதலியோர்க்கே சிறந்ததென்றார்" என்று கூறுவர் நச்சினார்க்கினியர்.

இளம்பூரணரோ 'ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவம் தூதாகிப் பிரியும் பிரிவும் நால்வகை வருணத்தினும் உயர்ந்த அந்தணர்க்கும் அரசர்க்கும் உரிய' என்று பொருள்கூறி 'இவர் ஒழுக்கத்தானும் குணத்தானும் செல்வத்தானும் உயர்புடையராதலின் 'உயர்ந்தோர்' என்றார் என விளக்கியுள்ளார். இதனின்றும் ஓதற்பிரிவு அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியதாக இளம்பூரணர் கருதுவது தெரிய வரும்.

ஆகவே இவர்கள் கூறும் அந்தணர் முதலிய மூவரும் என்ற உரையில் அந்தணர் என்பார் ஆரிய பிராமணர் முதலிய கூட்டத்தினர் ஆகமாட்டார் என்று கொள்ளினும்கூட கல்வித்துறையில் உயர்ந்தோர் உரிமை யுடையாரென்றும் மற்றோர் உரிமை யுடையரல்லரென்றும் பொதுவழக்கம் நிலவி இருந்தது என்பது தெரியவரும். தமிழ் அவாக் கொண்டு ஆராய்ந்து பார்த்துள்ள தமிழ் ஆராய்ச்சியாளர்களால் கூட அக்காலத்தில் கல்வித் துறையானது உயர்ந்தாரின் உரிமையாக இருந்துவந்த உண்மையை மறுத்துக் கூற முடியவில்லை. கல்வித் துறைக்கு ஏனையோரைப் போலவே உயர்ந்தாரான வேளாளரும் உரிமையுடையோர் ஆவர் என்று எடுத்துக் காட்டுவதோடு நின்று விட்டனர்.

கனவியல் இறையனார் அகப்பொருள் கூட
'அவற்றுள்
ஓதலும் காவலும் உயர்ந்தோர்க்குரிய'

(சூத்—36)

எனக் கூறுவதும் இதற்கு 'மேற் சொல்லப்பட்ட அறுவகைப் பிரிவினுள்ளும் ஓதற்கு பிரியும் பிரிவும் நாடு காத்தற்குப் பிரியும் பிரிவும் உயர்ந்தோர் என்பார் பார்ப்பாரும் அரசரும், அவ்விருவருக்கும் உரிய என்றவாறு' என நக்கீரர் உரை கூறுவதும் இவண் குறிக்கத்தக்கதாகும்.

தொல்காப்பியம் அகத்திணையியல் 31-வது சூத்திரத்தில் கூறியுள்ளது இன்னும் விளக்கமளிப்பதாகும். கற்பதற்குரிய பல்வகை நூல்களும் உயர்ந்தோர்க்கே உரியனவென்று கூறும் அச்சூத்திரத்தினின்றும் பண்டைக் காலத்தில் கற்பதற்கு இன்றியமையாதனவாகிய நூல்கள் யாவும் உயர்ந்த ஒரு கூட்டத்தாருடைய உடைமைகளாக இருந்து வந்தன வென்றும், பொதுமக்களானோர் கல்வி கற்றற்குரிய நூல்கள் பயிலுவதற்கு வழிவிடப்படாமல் மறுக்கப்பட்டனர் என்றும் தெரியலாம்.

"உயர்ந்தோர்க் குரிய வோத்தினான"

என்னும் அச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறும் பொருளாவது: 'வேதத்தினும் பிறந்த வடநூல்களும், தமிழ் நூல்களும் அந்தணர் அரசர் வணிகர்க்கும் உயர்ந்த வேளாளர்க்கும் உரிய என்றவாறு. அவை சமய நூல்களும் ஒன்றற்கொன்று மாறுபாடு கூறுந்தருக்க நூல்களுந் தருமநூல்களும் சோதிடமும் வியாகரண முதலியனவும் அகத்தியம் முதலாகத் தோன்றிய தமிழ் நூல்களுமாம். வேதந் தோன்றிய பின்னர் அது கூறிய பொருள்களை இவையும் ஆராய்தலின் ஓத்தின வெனறு அவற்றிற்குப் பெயர் கூறினார், ஓத்தென்பது வேதத்தையேயாதலின்." இது நச்சினார்க்கினியர் உரை. ஓத்து என்பது வேதத்தையன்று எனவும் பொதுவான அறிவியல் நூல்களைத்தான் ஓத்தென தொல்காப்பியர் கூறுகின்றார் எனவும் பொருள் கொண்டாலுங்கூட உயர்ந்தோரான ஒரு பகுதியார்க்கு மட்டும் அவை உரியனவா யிருந்தன. என்னும் உண்மையானது அக்காலப் பொதுமக்களானோர் கல்வி உரிமையினின்றும் புறக்கணிக்கப் பட்டிருந்தனர் என்பதை தெரிவிப்பது காண்க. 'வேதம் தோன்றிய பின்னர் அவை கூறிய பொருள்களை இவையும் ஆராயும்' என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பதை நோக்குமிடத்து வேதங்களென்பன தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்திலேயே தோன்றியவையாதல் என்னும் எண்ணம் நச்சினார்க்கினியர்க்கும் இருந்து வந்தது புலப்படுகின்றது. இது ஆராய்ச்சி அறிஞர்கள் கவனிக்க வேண்டியதாகும்.

முன்னர்க் கூறிய "ஓதற்பிரிவுந் தூதிற்பிரிவும் அந்தணர் முதலிய மூவரிடத்தன" என்பதற்கு காலவரையறையும் கூறுகின்றார் தொல்காப்பியர்.

'வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது'

(சூத் 183—பொருள்—கற்பியல்)

இச்சூத்திரத்திற்குப் பொருள் கூறிய ஓதற் பிரிவிற்குக் கால வரை யின்றென்பதூஉம் அவ்வோத்து இதுவென்பதூஉம் உணர்த்துகின்றது. துறவறத்தினைக் கூறும் வேதாங்க முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது அக்கல்வி யெல்லாம் மூன்று பதத்தைக் கடவாது என்றவாறு" நச்சினார்க்கினியர் கூறும் இப்பொருளிற்கு எதிராக இளம்பூரணர் (தொல்காப்பியம் பொருள் வ. உ. சி. பதிப்பு) மூன்றாண்டு வரையறைக்குட்பட்ட தென்று கூறுவர், "நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கு தத்துவப் பொருளொன்றை இட்டுக் கூறினராயினும் வழிநூல் செய்த நடையாறு கொள்கைப்படி (89) மூன்றாண்டென்பதே பொருத்தமாதும்" எனக் கூறுவர் மு. இராகவையங்கார் தம் தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி நூலின்கண்.

கல்வித் துறையில் மேல் கீழ் நிலைமை தெரிவிக்க நிற்கும் இக்கூற்றுடன் சங்ககால செய்தியொன்று குறிக்கத்தக்கதாகும்.

வடவாரியரை போரில் வென்று இமயம்வரை திராவிடப் பேரரசை விரிவு படுத்தி ஒரு குடை நிழலில் ஆண்ட **பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்** பாடியதாக **புறநானூற்றில்** ஒரு பாட்டுள்ளது. அப்பாட்டின் வாயிலாக கல்வி கற்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திக் கூறுகின்றார் பாண்டிய வேந்தர். ஒரு வயிற்றுள் பிறந்த மக்களாயினும் ஒரு குடி பிறந்த உற்றாராயினும் கல்வி விசேடத்தால் அறிவுத் துறையில் காரதம்மியம் உடையவராவார் என்று எடுத்துக் காட்டும் நெடுஞ்செழியன்,

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"

(புறநானூறு 183)

என்று கூறுவதும் கருதற்பாலது.

"வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்துள் ஒருவன் கற்பின் மேற்குலத்து ஒருவனும் இவன்கீழ்க் குலத்தானென்று பாராது கல்வி பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவன்" என்பது மேற்கூறிய புறநானூறு பாட்டின் பொருளாகும். (புறநானூறு உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு) இதனின்றும் அக்காலத்தில் மேல்குலத்தார் கீழ்குலத்தார் என்ற நாற்குலத்து பிறவி பாகுபாடுகளிருந்த தென்பதும், மேல்குலத்தார் கீழ்குலத்தாரைவிட கல்வியில் சிறந்திருந்தனரென்பதும். கீழ்குலத்தாரும் கல்வியை விரும்பி கற்பதனாலேயே ஒருவாறு சமூக உயர்வடைய வழி இருந்ததென்பதும், தெரிய வரும். அக்கால இவ்வுண்மையையும் தற்கால மக்கள் நிலையையும் கல்வித் துறையிலும் **கம்யூனல் ஜீ. ஓ.** என்பது இன்றியமையாத ஒன்றாக வேண்டப் படுவதையும் ஒப்புநோக்கிப் பார்க்கத்தக்கதாகும்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் இப்பாடலைப் பாடிய காலத்து பிறப்பு காரணமாகவே மக்களானோர் வேற்றுமைகள் கற்பிக்கப்பட்டு வேறு வேறான நான்கு வகுப்பினராக வாழ்ந்து வந்தனர் என்பதும், இப்படி வேற்றுமை தெரிந்த நான்கு வருண உட்பாட்டை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் போன்றோர் உடன்பட்டிருந்தனர் என்பதும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் இயற்கை நீதி அக்காலத்திலும் கவனிக்கப்படாதிருந்ததென்பதும் ஊகித்துணரலாம். அன்றியும் நால்வகை பாகுபாட்டு முறையை எதிர்த்து பாடப்பட்ட பாடலாகக் கொண்டு, அக்காலத்தே ஆரிய வருண பாகுபாட்டு முறைக்கு எதிர்ப்புக் காட்டிய வரலாற்றை நெடுஞ்செழியன் இப்பாடல் மூலம் தெரிவிப்பதாகக் கொள்வதும் பொருத்தமுடையதே யாகும்.

—தொடரும்

இதுதான் உலகம்—தொடர்ச்சி

ணம்கொடுத்துப் பேணும்சாமர்த்தியத்தை வளர்த்துக்கொள்ள வில்லை...

டாக்டருக்குப் படித்தவன் குமாஸ்தாவாகிறான்; குமாஸ்தாவுக்குப் படித்தவன் குப்பைகூட்டுகிறான். குப்பை கூட்டத் தயாராவன் தேம்பி நிற்கிறான். இந்த மூவரில் எவனுக்கும் நிம்மதியில்லை எப்போதும் எரிமலையாகவே காட்சியளிக்கின்றனர்.

இதற்குப் பரிகாரம் என்னவென்றால், மேல்நாடுகள் சிலவற்றில் உள்ளதைப்போல, தொழில் வல்லுனர் தேவையைப் பற்றிய திட்டமானதொரு புள்ளிவிவரம் அரசாங்கத்திடம் இருக்க வேண்டும். குறிப்பாக தங்கம், வெள்ளி போன்ற சர்வதேச அந்தஸ்துவாய்ந்த பொருட்களை கையிருப்பில் வைத்துக்கொண்டு அதற்குத் தகுந்த மாதிரியிலேயே தனது உள்நாட்டு நாணயச் செலவாணியைப் புழங்கவிடுவதைப்போல— அல்லது, உற்பத்தியும் விநியோகமும் சமமாக இருக்கும்படிக்காக தன்னுடையவரவுசெலவுதிட்டத்தை ஒவ்வொரு அரசாங்கமும் வகுத்துக் கொள்வதைப்போல உயர்தர தொழில் நுணுக்க பட்டதாரிகளும் ஒரு வரம்புக்குட்படுத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

உள்நாட்டு நாணயச் செலவாணி முறையில் பழுது நேர்ந்தால், பணவீக்கம் உண்டாகி பொருட்களின் மதிப்பு உயர்ந்துவிடும், அல்லது பொருட்கள் குவிந்து பணம் பதுங்கிவிடும். பட்டதாரிகளின் தன்மையும் இதேபோல்தான்.

உதாரணமாக பிரஸ்தாப ஆண்டுக்கு பத்தாயிரம் இன்சினீயர்களுக்கே வேலை கொடுக்க முடியும் என்று அரசாங்கம் நினைக்குமானால் பத்தாயிரம் பேருக்கு மேல் அந்த ஆண்டில் இன்சினீயர்களாக ஆவதற்கு பயிற்சியளிக்கப் படமாட்டாது என்று நிர்ணயித்துவிட வேண்டும். இதனால் ஒன்றை எதிர்பார்த்து உதவாததைக் கட்டியழும் மனிதர்களின் ஓலக் குரலைத் தணிக்க முடியும். படிப்புக்கு இருக்கும் மரியாதையும் காப்பாற்றப்படும்.

பட்டப் படிப்பு படித்தோரில் பெரும்பாலானவர்கள், அரசாங்க வேலைகளையே எதிர்பார்த்துக் காத்திருக்கும்படி விட்டுவைப்பது மூன்றாவதான ஆபத்து. என்னுடைய சொந்தக் கருத்தைக் கேட்டால், **B. A., M. A.,** என்ற வெறும் பட்டப்படிப்பு முறையையே ஒழித்துக்கட்டிவிட்டால் கூட நமது நாட்டுக்கு ஒன்றும் பழுதாகி விடாது. அடிப்படைக்கல்வி வரையில் அதாவது இப்போதுள்ள **S. S. L. C.** வரையில் ஒவ்வொரு பிரஜையும் கண்டிப்பாக படித்தாக வேண்டும் என்கிற அடிப்படையில் திட்டம் அமைத்து அதற்குமேல், அவனவனே அவனவன் மனதுக்குப் பிடித்த தொழிற் கல்வியில் பயிற்சிபெற வசதியளிக்கப்பட வேண்டும். சட்டப் படிப்பு படிக்க விரும்பும் ஒருவன் **B. A.,** படித்துவிட்டு போகவேண்டு மென்பதில்லாமல் **S. S. L. C.** முடிந்ததும் அந்தத் துறையில் புகுந்து விடலாம். **S. S. L. C.** படித்தால் சட்டப் படிப்பைப் புரிந்து கொள்ளும் தகுதி வராதே என்று சொல்லப்படுமானால், **B.A.**,வுக்குப் படிக்கும் காலத்தை சட்டப் படிப்பு வகையில் நீட்டலாம். இப்படிச் செய்வதால், இரண்டு பட்டங்களுக்காகப் போராட்டம் நடத்துவதுமாறி ஒரே படிப்பை நெடுங்காலம் ஊன்றிப் படித்து திறமை பெறலாம்.

அத்துடன் படித்துத் தேறியவர்கள் அரசாங்க அலுவலையே எதிர்பார்ப்பதிலும் அர்த்தமிருக்கிறது. அதாவது, அரசாங்க அலுவலிலே 4ஆண்டுகள் உழைத்தானென்றால், அவனுடைய 4 ஆண்டு கால உழைப்புக்குப் போதிய உத்தரவாதம் கொடுக்கப்படுகிறது. பல ஆண்டுகள் ஊழியஞ் செய்து விலகிய பின்னால், ஒரு நிரந்தர வருமானத்துக்கு வழிகிடைக்கிறது. மற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களிலே இந்த சலுகைகள் இல்லை. அரசாங்கம் இதை உடனடியாகக் கவனித்து தனிப்பட்ட ஸ்தாபனங்களும் அரசாங்கத்தைப் போலவே ஊழியர் விஷயத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்று கடுமையான சட்டம் கொண்டுவர வேண்டும். அரசாங்க வேலைக்கும் தனிப்பட்ட ஸ்தானங்களில் ஊழியஞ் செய்வதற்கும் எத்தகைய வேறுபாடும் இல்லை யென்றாகிவிடுமானால், எத்தனையோ பட்டதாரிகள் திருப்தியுடன் வேறு வேலைகளை மேற்கொள்வர்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு இந்தக் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன். தேசிய மொழிப் பிரச்னை ஒன்றினாலேயே கல்வி முறை நிச்சயமற்ற தன்மையில் போய்க்கொண்டிருக்கிறது. திறமையான பயிற்சியைவிட வீம்பான பயிற்சியே விஷவேகத்தில் பரவி வருகிறது.

நாட்டை செப்பனிட்டுச் சீராக்குவது பட்டதாரிகளல்ல; அந்தப் பட்டத்தை அளிப்போரின் தூய்மையான தொண்டு

கடிதம் நீண்டு விட்டது. மற்றவை அடுத்த கடிதத்தில்.

—மு. சண்முகம்

"படித்த முட்டாள்"

பவனி வர ஏற்பாடு!

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தயாரிக்கப் போகும் 'படித்த முட்டாள்' என்ற திரைப்படத்தை உரு வாக்கும் விழா சென்னை கோடம்பாக்கம் வாஹினி ஸ்டுடியோவில் 27—2—55-ம் நாளன்று நடைபெற்றது. இப்படப்பிடிப் பைத் தோழர் இரா. நெடுஞ்செழியன் துவக்கி வைத்தார்.

"வெற்றிலை போடும்போது பாக்கும் சுண்ணும்பும் எவ்வளவு முக்கியமோ அது போலவே திரைப்படத் துறையில் நாட்டின் நல்வாழ்வுக்கு ஆக்கமளிக்கும் சிறந்த கருத் துக்களும் அமையவேண்டு"மென்று தோழர் இரா. நெடுஞ்செழியன் எடுத்துக்காட்டினர்

படித்த முட்டாள் யார் ?

'இந்தப் படத்திற்கு 'படித்த முட்டாள்' என்ற தீவிரமான பெயரை வைக்கத் தயங் கினேம். ஆனல் வேறுபெயர் ஒன்றும் தகுதி யாக இல்லையே! என்ன செய்வது? யோசித் தோம் யோசித்தோம் கடைசியில் இந்தப் பெயரையே வைத்து விட்டோமென, என். எஸ். கிருஷ்ணன் கூறினர்.

படித்த முட்டாள் என்றல் யார் தெரி யுமோ என்பதை விளக்கிக் கூறுகையில், 'உயர்ந்த படிப்பு படித்த ஒருவர் பெரியவீடு ஒன்று கட்டினர். அவ்வீட்டில் குடியேறுவ தற்காக நல்ல நாள் பார்த்து அந்த நாளைக்கு முதல் நாள் லட்சுமி என்ற பெயரையுடைய தனது வேலைக்காரியை அழைத்து நீ இங் கேயே யிருக்க வேண்டும். காலையில் நான் வந்து அழைப்பேன் அப்போது நீ கதவைத் திறக்க வேண்டும் என்று கட்டளையிட்டுச் சென்று விட்டார்!

அதுபோலவே அந்த வேலைக்காரப் பெண்ணும் காவலிருந்தாள், இரவு முழு தும் அங்கே காவலிருக்க லட்சுமிக்குப் பய மாய் இருந்தது. தனது அக்காவை அழைத்து காவல் இருக்கும்படி கூறிவிட்டு லட்சமி போய்விட்டாள். அடுத்த நாள் காலை அந்த படித்த மேதாவி வந்து "லட்சுமி கதவைத் திற" என்ருர். உடனே, லட்சுமி இல்லை அவள் அக்காள் மூதேவிதான் இருக்கிறேன் என்று பதில் வந்தது.

பரிதாபத்துக்குரிய படித்தமேதாவி லட்சு மியே கதவைத் திறக்கவேண்டுமென்றுசெய் துவைத்த ஏற்பாடு இவ்வாறு சீர்குலைந்து போனதுகுறித்துவருந்தினர்! இப்படிப்பட் டவர்களைத்தான் படித்த முட்டாள்கள் என் கிறேம். படிப்பு மட்டும் இருந்தால்போதுமா பகுத்தறிவும் வேண்டுமே'! என்று என். எஸ். கிருஷ்ணன் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

இப்படத்திற்கு வசனம் தீட்டப்போகும் கவிஞர் கண்ணதாசன் பேசிய பின் நீதிபதி ஏ. எஸ்.பி. அய்யரும் பேசினர்.

கலைவாணர் என். எஸ். கே. அவர்க ளால் உருவாகப் போகும் இந்தப் "படித்த முட்டாள்" விரைவில் நாடெங்கும் பவனி வருவாராம்!

நடிகவேள் எம். ஆர். ராதா

சுற்றுப் பயணம்

மார்ச் 1-முதல் 6-ந் தேதிவரை தூக்கு மேடை மீனுட்சி தியேட்டர் குடந்தை.

7—3—55 தூக்குமேடை. நாகரத்னு ரோடு தியேட்டர் திருக்கோவிலூர்.

வெள்ளித் திரை விரிந்த விதம்!

இந்தியத் துணைக் கண்டத்திலே இந்த நூற் ருண்டின் துவக்கத்தில் வங்காளத்திலும், பம்பாயி லும் திரைப் படங்களைத் தயாரிக்க யாரோ முயற் சித்தனராம்! ஆனல் அவர்களின் முயற்சி என்னவா யிற்று என்பது தெரியவில்லையாம்! எனவே 1913-ம் ஆண்டு பம்பாயில் திரையிடப்பட்ட 'ராஜா அரிச் சந்திரா' என்ற புராணப் படத்தைத் தயாரித்த தாதா சாகேப் பால்கேயின் முயற்சியிலிருந்துதான் இந்தியத் துணைக்கண்டத்தின் திரைப்படத் தொழில் ஆரம்பமாகிறதாம்.

எனினும் இந்த அரிச்சந்திராதான் இந்தியா வில் திரையிடப்பட்ட முதல் மவுனப்படம் என்ப தல்ல. அதற்கு முன்னதாகவே அமெரிக்க மவுனப் படங்கள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் திரை யிடப்பட்டிருக்கின்றன.

அரிச்சந்திராவைத் தொடர்ந்து பல மௌனப் படங்கள் உருவாக்கப்பட்டன. ஆனல் எல்லாம் புராணப் படங்களே! நீண்ட காலத்துக்குப் பிறகு 'ஸ்டண்ட்' படங்களும் அதைத் தொடர்ந்து சமூ கப் படங்களும் தலைகாட்ட ஆரம்பித்தன.

ஆரம்ப காலத்தில் இப்படங்களுக்கு அதிக ஆதரவு யில்லை யெனினும் இன்று புராணப்படங் களைத் தயாரிப்பதென்றல் பட முதலாளிகளுக்கு' பொருளாதாரப் பள்ளம் விழுமே என்ற நடுக்கமேற் படுகிறது. பொதுவாக கலையுலகிற்குறிப்பாக திரைப் படத் துறையில் பகுத்தறிவை அடிப்படையாக வைத்துப் படமெடுப்பதும், அதைவிட பொதுமக் கள் பகுத்தறிவை முன்வைத்தே படத்தை ரசிப்பது மான சூழ்நிலை வளர்ந்து வருகிறது.

இவ்வித வளர்ச்சி பெற்று வரும் கலைத்துறை யை அவ்வப்போது ஒழுங்குபடுத்த படத்தயாரிப் பாளர்கள், டைரக்டர்கள், தொழிலறிஞர்கள், கலை ஞர்கள், கதை—வசன கர்த்தாக்கள் போன்ற திரைப் படத் துறையில தொடர்பு கொண்ட பலர் ஒன்று கூடி டெல்லியில் பேசினர் சென்ற ஒருவார காலம்! சங்கீத நாடக அகடமி இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது!

இந்தப் பேச்சு வார்த்தைகளிலிருந்து கலைத் துறையில் மேலும் பகுத்தறிவு வளர வழி வகுக்கப் படுமா அல்லது மறைமுகமாக அதற்கு முட்டுக் கட்டை யிடப்படுமா என்பதே நமது கேள்வி!

தி. மு. கழகத் தேர்தல்கள் : பொதுச் செயலாளர் அண்ணு அவர்களின் அறிக்கை

27-3-55 ஞாயிறு : சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகளின் செயற்குழுத் தேர்தல்

10-4-55 ஞாயிறு : மாவட்டக் கிளைகளின் செயற்குழுத் தேர்தல்

24-4-55 ஞாயிறு : புதிய பொதுக்குழு கூட்டத்தில் பொதுச் செயலாளர் தேர்தல்

பொதுச் செயலாளர் அண்ணு அவர் கள் இவ்வாண்டு நடைபெற வேண்டிய தி. மு. கழகத் தேர்தல்கள் குறித்து கீழ்க் கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள் அது வருமாறு :

தி. மு. கழக சிற்றூர் (சிறிய பஞ்சா யத்து Minor Panchayat)க் கிளை, பேரூர் (பெரிய பஞ்சாயத்து Major Panchayat)க் கிளை, நகர (நகராட்சி Municipality)க் கிளை, சென்னை வட்ட (Division)க் கிளை ஆகியவற்றின் புதிய செயற்குழுத் தேர்தல் கள் நடைபெற, 27-3-55 ஞாயிற்றுக் கிழமை தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறது.

எல்லா மாவட்டங்களின் செயற்குழுத் தேர்தல் நாளாக, 10-4-55 ஞாயிற்றுக் கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய பொதுக்குழுக் கூடி பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நாளாக, 24-4-55 ஞாயிற்றுக் கிழமை தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கிறது.

1-3-55-ம் நாளிலிருந்து 31-4-55-ம் நாள் வரையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப் பது நிறுத்தப்பட்டிருக்கிறது. 28-2-55-ம் நாள்வரை உறுப்பினரானவர்கள் மட்டுமே கிளைக் கழகத் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும். 28-2-55-ம் நாளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்த வேண்டும். புதிய கிளைக் கழகங்கள் அமைப்பது 1-5-55-க்கு மேல தான் நடைபெற வேண்டும்.



கர்னுடக தி. மு. கழக மாநாட்டின் நிர்வாகிகள்

இடமிருந்து வலம் : செயலாளர் எ. டி. பிரான்சிஸ் பொருளாளர் : எம். ஆர். பெருமாள், விளம்பரச் செயலாளர் கி. சோழன்.

கிளைக் கழகங்கள் அண்மையில் தேர் தல் நடத்தி யிருந்தாலும் 27—3—55-ஆம் நாளில் மீண்டும் கூடி உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவுகளை கிளைக் கழகப் பதி வுச் சீட்டில் எழுதி. 31—3—55-க்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் கழக பதிவுச் சீட்டு, தலை மைக் கழகத்திலிருந்து 10—3—55-ம் நாள் அனுப்பி வைக்கப்படும். பதிவுச் சீட்டு கிடைக்கப்பெருத கிளைக்கழகங்கள் உடனே தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

27—3—55-ல் தேர்தல் நடத்தி பதிவுச் சீட்டைத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும் கிளைகள் மட்டுமே மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பெறும்.

கிளைகளின் தேர்தல் விதிகளும், முறை களும் அடுத்த அறிக்கையில் வெளியிடப் படும்.

சி. என். அண்ணுதுரை
பொதுச்செயலாளர்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழ அச்சகம் 16. கிலையன்ஸ் ஜரஸ் மில் தெரு, சென்னை